ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ரு'தி₃ ॥

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருவரங்கம் ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருவரங்கம் ॥

## பொது தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாத2ார்யம் வந்தே3 வேத3ாந்ததே3ஶிகம் ॥ 1 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்ப4ாம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மத3ாசார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 2 ॥

யோ நித்யமச்யுதபத3ாம்பு3ஜயுக்3மருக்ம-
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ருணாயமேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தே4ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 3 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 4 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹத3ாஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ 5 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு3ருமுக2மநதீ4த்ய ப்ராஹ வேத3ாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாத3ாதுகாம: ।

www.prapatti.com

ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
    த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால்⋆
    சொன்னார் கழற்கமலம் சூடினோம்⋆- முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்⋆ கீழ்மையினிற் சேரும்
    வழியறுத்தோம்⋆ நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று⋆
    ஈண்டிய சங்கம் எடுத்தூத⋆ வேண்டிய
வேதங்களோதி⋆ விரைந்து கிழியறுத்தான்⋆
    பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி - திருப்பல்லாண்டு

‡பல்லாண்டு பல்லாண்டு⋆ பல்லாயிரத்தாண்டு⋆
    பல கோடி நூறாயிரம்⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!⋆ உன்-
    சேவடி செவ்வி திருக்காப்பு (1)

‡அடியோமோடும் நின்னோடும்⋆ பிரிவின்றி
    ஆயிரம் பல்லாண்டு⋆
வடிவாய் நின் வல மார்பினில்⋆ வாழ்கின்ற
    மங்கையும் பல்லாண்டு⋆
வடிவார் சோதி வலத்துறையும்⋆ சுட-
    ராழியும் பல்லாண்டு⋆
படை போர் புக்கு முழங்கும்⋆ அப்பாஞ்ச-
    சன்னியமும் பல்லாண்டே (2)

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல்⋆ வந்து
    மண்ணும் மணமும் கொண்மின்⋆
கூழாட் பட்டு நின்றீர்களை⋆ எங்கள்
    குழுவினில் புகுதலொட்டோம்⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்⋆

www.prapatti.com

இராக்கதர்வாழ்⋆ இலங்கை-
பாழாளாகப் படை பொருதானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து⋆
எங்கள் குழாம் புகுந்து⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி⋆
வந்தொல்லைக் கூடுமினோ⋆
நாடு நகரமும் நன்கறிய⋆ நமோ
நாராயணாயவென்று⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!⋆ வந்து
பல்லாண்டு கூறுமினே (4)

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி⋆
அசுரர் இராக்கதரை⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த⋆
இருடீகேசன் தனக்கு⋆
தொண்டக் குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது⋆
ஆயிர நாமம்சொல்லி⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து⋆ பல்லாண்டு பல்-
லாயிரத்தாண்டென்மினே (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்⋆
ஏழ் படி கால் தொடங்கி⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்⋆ திரு-
வோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி⋆
அரியை அழித்தவனை⋆
பந்தனை தீரப் பல்லாண்டு⋆ பல்லாயிரத்-
தாண்டென்று பாடுதுமே (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி⋆
திகழ் திருச்சக்கரத்தின்⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று⋆

www.prapatti.com

குடிகுடி ஆட்செய்கின்றோம்⋆
மாயப் பொருபடை வாணனை⋆ ஆயிரந்
தோளும் பொழி குருதி-
பாய⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (7)

நெய்யிடை நல்லதோர் சோறும்⋆ நியதமும்
அத்தாணிச் சேவகமும்⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு⋆
காதுக்குக் குண்டலமும்⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து⋆ என்னை
வெள்ளுயிராக்க வல்ல⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்⋆
பல்லாண்டு கூறுவனே (8)

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை
உடுத்துக்⋆ கலத்ததுண்டு⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன⋆
சூடுமித்தொண்டர்களோம்⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித்⋆ திரு-
வோணத் திருவிழவில்⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (9)

எந்நாள் எம்பெருமான்⋆ உன்தனக்கடி-
யோம் என்றெழுத்துப்பட்ட-
அந்நாளே⋆ அடியோங்கள் அடிக்குடில்⋆
வீடுபெற்றுய்ந்ததுகாண்⋆
செந்நாள் தோற்றித்⋆ திருமதுரையுள் சிலை-
குனித்து⋆ ஐந்தலைய-
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!⋆ உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே (10)

www.prapatti.com

அல்வழக் கொன்றுமில்லா⋆ அணிகோட்டியர் கோன்⋆
  அபிமான துங்கன்-
செல்வனைப்போலத்⋆ திருமாலே! நானும்
  உனக்குப் பழவடியேன்⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று⋆
  நாமம் பல பரவி⋆
பல்வகையாலும் பவித்திரனே!⋆ உன்னைப்
  பல்லாண்டு கூறுவனே (11)

‡பல்லாண்டென்று பவித்திரனைப்⋆ பர-
  மேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆ வில்லிபுத்தூர் விட்டு-
  சித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆ நமோ
  நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆ சூழ்ந்திருந்-
  தேத்துவர் பல்லாண்டே (12)

## திருவரங்கம் பாசுரங்கள்

### பெரியாழ்வார் திருமொழி (2-7) - ஆனிரை

கருவுடை மேகங்கள் கண்டால்⋆ உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்⋆
  உருவுடையாய்! உலகேழும்⋆ உண்டாக வந்து பிறந்தாய்!⋆
திருவுடையாள் மணவாளா!⋆ திருவரங்கத்தே கிடந்தாய்!⋆
1 மருவி மணம் கமழ்கின்ற⋆ மல்லிகைப் பூச் சூட்ட வாராய் (2)

சீமாலிகன் அவனோடு⋆
  தோழமை கொள்ளவும் வல்லாய்!⋆
சாமாறவனை நீ எண்ணிச்⋆
  சக்கரத்தால் தலை கொண்டாய்!⋆
ஆமாறறியும் பிரானே!⋆
  அணி அரங்கத்தே கிடந்தாய்!⋆

ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்!⋆
2 இருவாட்சிப் பூச் சூட்ட வாராய் (8)

## பெரியாழ்வார் திருமொழி (2-9) - வெண்ணெய்விழுங்கி

‡வண்டு களித்திரைக்கும் பொழில் சூழ்⋆
வரு புனல் காவிரித் தென்னரங்கன்⋆
பண்டவன் செய்த கிரீடை எல்லாம்⋆
பட்டர் பிரான் விட்டுசித்தன் பாடல்⋆
கொண்டிவை பாடிக் குனிக்க வல்லார்⋆
கோவிந்தன் தன் அடியார்கள் ஆகி⋆
எண் திசைக்கும் விளக்காகி நிற்பார்⋆
3 இணையடி என் தலை மேலனவே (11)

## பெரியாழ்வார் திருமொழி (3-3) - சீலைக்குதம்பை

கன்னி நன் மா மதிள் சூழ் தரு⋆ பூம் பொழில்
காவிரித் தென்னரங்கம்⋆
மன்னிய சீர் மதுசூதனா! கேசவா!⋆
பாவியேன் வாழ்வுகந்து⋆
உன்னை இளங்கன்று மேய்க்கச்⋆ சிறுகாலே
ஊட்டி ஒருப்படுத்தேன்⋆
என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை⋆
4 என் குட்டனே முத்தம் தா (2)

## பெரியாழ்வார் திருமொழி (4-8) - மாதவத்தோன்

‡மா தவத்தோன் புத்திரன் போய்⋆ மறி கடல்வாய் மாண்டானை⋆
ஓதுவித்த தக்கணையா⋆ உருவுருவே கொடுத்தான் ஊர்⋆
தோதவத்தித் தூய் மறையோர்⋆ துறை படியத் துளும்பி எங்கும்⋆
5 போதில் வைத்த தேன் சொரியும்⋆ புனல் அரங்கம் என்பதுவே (1)

பிறப்பகத்தே மாண்டொழிந்த⋆
பிள்ளைகளை நால்வரையும்⋆

www.prapatti.com

இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து⋆
ஒருப்படுத்த உறைப்பன் ஊர்⋆
மறைப் பெருந் தீ வளர்த்திருப்பார்⋆
வருவிருந்தை அளித்திருப்பார்⋆
சிறப்புடைய மறையவர் வாழ்⋆
6 திருவரங்கம் என்பதுவே (2)

மருமகன் தன் சந்ததியை⋆ உயிர் மீட்டு மைத்துனன்மார்⋆
உருமகத்தே வீழாமே⋆ குருமுகமாய்க் காத்தான் ஊர்⋆
திருமுகமாய்ச் செங்கமலம்⋆ திருநிறமாய்க் கருங்குவளை⋆
7 பொரு முகமாய் நின்றலரும்⋆ புனல் அரங்கம் என்பதுவே (3)

கூன் தொழுத்தை சிதகுரைப்பக்⋆
கொடியவள் வாய்க் கடியசொல் கேட்டு⋆
ஈன்றெடுத்த தாயரையும்⋆
இராச்சியமும் ஆங்கொழிய⋆
கான் தொடுத்த நெறி போகிக்⋆
கண்டகரைக் களைந்தான் ஊர்⋆
தேன் தொடுத்த மலர்ச் சோலைத்⋆
8 திருவரங்கம் என்பதுவே (4)

பெருவரங்கள் அவை பற்றிப்⋆ பிழக்குடைய இராவணனை⋆
உருவரங்கப் பொருதழித்து⋆ இவ்வுலகினைக் கண் பெறுத்தான் ஊர்⋆
குரவரும்பக் கோங்கலரக்⋆ குயில் கூவும் குளிர் பொழில் சூழ்⋆
9 திருவரங்கம் என்பதுவே⋆ என் திருமால் சேர்விடமே (5)

கீழ் உலகில் அசுரர்களைக்⋆ கிழங்கிருந்து கிளராமே⋆
ஆழிவிடுத்தவருடைய⋆ கருவழித்த அழிப்பன் ஊர்⋆
தாழை மடல் ஊடுரிஞ்சித்⋆ தவள வண்ணப் பொடி அணிந்து⋆
10 யாழின் இசை வண்டினங்கள்⋆ ஆளம் வைக்கும் அரங்கமே (6)

கொழுப்புடைய செழுங்குருதி⋆ கொழித்திழிந்து குமிழ்த்தெறிய⋆
பிழக்குடைய அசுரர்களைப்⋆ பிணம் படுத்த பெருமான் ஊர்⋆

www.prapatti.com

தழுப்பரிய சந்தனங்கள்⋆ தடவரை வாய் ஈர்த்துக் கொண்டு⋆
11 தெழிப் புடைய காவிரி வந்து⋆ அடி தொழும் சீர் அரங்கமே (7)

வல் எயிற்றுக் கேழலுமாய்⋆
வாள் எயிற்றுச் சீயமுமாய்⋆
எல்லை இல்லாத் தரணியையும்⋆
அவுணனையும் இடந்தான் ஊர்⋆
எல்லியம் போதிருஞ்சிறை வண்டு⋆
எம் பெருமான் குணம் பாடி⋆
மல்லிகை வெண் சங்கூதும்⋆
12 மதிள் அரங்கம் என்பதுவே (8)

குன்றாடு கொழு முகில் போல்⋆
குவளைகள் போல் குரை கடல் போல்⋆
நின்றாடு கணமயில் போல்⋆
நிறம் உடைய நெடுமால் ஊர்⋆
குன்றூடு பொழில் நுழைந்து⋆
கொடி இடையார் முலை அணவி⋆
மன்றூடு தென்றல் உலாம்⋆
13 மதிள் அரங்கம் என்பதுவே (9)

‡பரு வரங்கள் அவைபற்றிப்⋆ படையாலித்தெழுந்தானை⋆
செருவரங்கப் பொருதழித்த⋆ திருவாளன் திருப்பதி மேல்⋆
திருவரங்கத் தமிழ் மாலை⋆ விட்டுசித்தன் விரித்தன கொண்டு⋆
14 இருவர் அங்கம் எரித்தானை⋆ ஏத்த வல்லார் அடியோமே (10)

## பெரியாழ்வார் திருமொழி (4-9) - மரவடியை

‡மரவடியைத் தம்பிக்கு⋆ வான் பணையம்
வைத்துப்போய் வானோர் வாழ⋆
செருவுடைய திசைக்கருமம்⋆ திருத்தி
வந்துலகாண்ட திருமால் கோயில்⋆
திருவடி தன் திருவுருவும்⋆
திருமங்கை மலர் கண்ணும் காட்டி நின்று⋆



www.prapatti.com

உருவுடைய மலர் நீலம் காற்றாட்ட⋆
15 ஓசலிக்கும் ஒளி அரங்கமே (1)

‡தன் அடியார் திறத்தகத்துத்⋆
தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல்⋆
என் அடியார் அது செய்யார்⋆ செய்தாரேல்
நன்று செய்தார் என்பர் போலும்⋆
மன் உடைய விபீடணற்கா⋆ மதில்
இலங்கைத் திசை நோக்கி மலர் கண் வைத்த⋆
என்னுடைய திருவரங்கற்கன்றியும்⋆
16 மற்றொருவர்க்காள் ஆவரே (2)

கருள் உடைய பொழில் மருதும்⋆
கதக் களிறும் பிலம்பனையும் கடிய மாவும்⋆
உருள் உடைய சகடரையும் மல்லரையும்⋆
உடைய விட்டோசை கேட்டான்⋆
இருள் அகற்றும் எறி கதிரோன்⋆
மண்டலத்தூடேற்றி வைத்தேணி வாங்கி⋆
அருள் கொடுத்திட்டடியவரை⋆
17 ஆட்கொள்வான் அமரும் ஊர் அணி அரங்கமே (3)

பதினாறாம் ஆயிரவர்⋆ தேவிமார்
பணிசெய்ய⋆ துவரை என்னும்
அதில் நாயகராகி வீற்றிருந்த⋆
மணவாளர் மன்னு கோயில்⋆
புது நாண் மலர்க் கமலம்⋆ எம் பெருமான்
பொன் வயிற்றில் பூவே போல்வான்⋆
பொது நாயகம் பாவித்து இருமாந்து⋆
18 பொன் சாய்க்கும் புனல் அரங்கமே (4)

ஆமையாய்க் கங்கையாய்⋆ ஆழ்
கடலாய் அவனியாய் அரு வரைகளாய்⋆
நான்முகனாய் நான்மறையாய்⋆
வேள்வியாய்த் தக்கணையாய்த் தானும் ஆனான்⋆

www.prapatti.com

சேமம் உடை நாரதனார்⋆ சென்று
    சென்று துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில்⋆
பூ மருவிப் புள் இனங்கள்⋆ புள்
19 அரையன் புகழ் குழறும் புனல் அரங்கமே (5)

மைத்துனன்மார் காதலியை மயிர்
    முடிப்பித்து⋆ அவர்களையே மன்னர் ஆக்கி⋆
உத்தரை தன் சிறுவனையும் உய்யக்கொண்ட⋆
    உயிராளன் உறையும் கோயில்⋆
பத்தர்களும் பகவர்களும்⋆
    பழமொழிவாய் முனிவர்களும் பரந்த நாடும்⋆
சித்தர்களும் தொழுதிறைஞ்சத்⋆ திசை
20 விளக்காய் நிற்கின்ற திருவரங்கமே (6)

குறட் பிரமசாரியாய்⋆ மாவலியைக்
    குறும்பதக்கி அரசுவாங்கி⋆
இறைப் பொழுதில் பாதாளம் கலவிருக்கை⋆
    கொடுத்துகந்த எம்மான் கோயில்⋆
எறிப்புடைய மணிவரைமேல்⋆
    இளஞாயிறெழுந்தாற் போல் அரவணையின் வாய்⋆
சிறப்புடைய பணங்கள் மிசைச்⋆
21 செழு மணிகள் விட்டெறிக்கும் திருவரங்கமே (7)

உரம் பற்றி இரணியனை⋆ உகிர்
    நுதியால் ஒள்ளிய மார் புறைக்க ஊன்றி⋆
சிரம் பற்றி முடி இடியக் கண் பிதுங்க⋆
    வாய் அலறத் தெழித்தான் கோயில்⋆
உரம் பெற்ற மலர்க் கமலம்⋆
    உலகளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட⋆
வரம்புற்ற கதிர்ச் செந்நெல்⋆
22 தாள் சாய்த்துத் தலை வணக்கும் தண் அரங்கமே (8)

தேவுடைய மீனமாய் ஆமையாய்⋆
    ஏனமாய் அரியாய்க் குறளாய்⋆

www.prapatti.com

மூவுருவில் இராமனாய்⋆ கண்ணனாய்க்
    கற்கியாய் முடிப்பான் கோயில்⋆
சேவலொடு பெடை அன்னம்⋆ செங்கமல
    மலர் ஏறி ஊசல் ஆடி⋆
பூவணைமேல் துதைந்தெழு⋆ செம் பொடி
23 ஆடி விளையாடும் புனல் அரங்கமே (9)

செருவாளும் புள்ளாளன் மண்ணாளன்⋆
    செருச் செய்யும் நாந்தகம் என்னும்
ஒரு வாளன்⋆ மறையாளன் ஓடாத
    படையாளன்⋆ விழுக்கை யாளன்⋆
இரவாளன் பகல் ஆளன் என்னை ஆளன்⋆
    ஏழுலகப் பெரும் புரவாளன்⋆
திருவாளன் இனிதாகத்⋆ திருக்கண்கள்
24 வளர்கின்ற திருவரங்கமே (10)

‡கைந்நாகத்திடர் கடிந்த⋆ கனல்
    ஆழிப் படை உடையான் கருதும் கோயில்⋆
தென்னாடும் வடநாடும் தொழநின்ற⋆
    திருவரங்கம் திருப் பதியின் மேல்⋆
மெய்ந்நாவன் மெய் அடியான்⋆ விட்டுசித்தன்
    விரித்த தமிழ் உரைக்க வல்லார்⋆
எஞ்ஞான்றும் எம்பெருமான் இணையடிக்கீழ்⋆
25 இணை பிரியாதிருப்பர் தாமே (11)

## பெரியாழ்வார் திருமொழி (4-10) - துப்புடையாரை

‡துப்புடையாரை அடைவதெல்லாம்⋆
    சோர் விடத்துத் துணை ஆவர் என்றே⋆
ஒப்பிலேன் ஆகிலும் நின் அடைந்தேன்⋆
    ஆனைக்கு நீ அருள் செய்தமையால்⋆
எய்ப்பென்னை வந்து நலியும்போது⋆ அங்-
    கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்⋆



www.prapatti.com

அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்⋆
26 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (1)

சாம் இடத்தென்னைக் குறிக்கொள் கண்டாய்⋆
சங்கொடு சக்கரம் ஏந்தினானே!
நா மடித்தென்னை அநேக தண்டம்⋆
செய்வதா நிற்பர் நமன் தமர்கள்⋆
போம் இடத்துந்திறத்தெத்தனையும்⋆
புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை⋆
ஆம் இடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன்⋆
27 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (2)

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்⋆
எற்றி நமன் தமர் பற்றும்போது⋆
நில்லுமின் என்னும் உபாயம் இல்லை⋆
நேமியும் சங்கமும் ஏந்தினானே!
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம்⋆
சொல்லினேன் என்னைக் குறிக்கொண்டென்றும்⋆
அல்லல் படாவண்ணம் காக்க வேண்டும்⋆
28 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (3)

ஒற்றை விடையனும் நான்முகனும்⋆
உன்னை அறியாப் பெருமையோனே!
முற்றவுலகெல்லாம் நீயே ஆகி⋆
மூன்றெழுத்தாய முதல்வனே ஓ!
அற்றது வாழ்நாள் இவற்கென்றெண்ணி⋆
அஞ்ச நமன் தமர் பற்றல் உற்ற⋆
அற்றைக்கு நீ என்னைக் காக்க வேண்டும்⋆
29 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (4)

பை அரவின் அணைப் பாற்கடலுள்⋆
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி!
உய்ய உலகு படைக்க வேண்டி⋆
உந்தியில் தோற்றினாய் நான்முகனை⋆


www.prapatti.com

வைய மனிசரைப் பொய் என்றெண்ணிக்⋆
    காலனையும் உடனே படைத்தாய்⋆
ஐய! இனி என்னைக் காக்க வேண்டும்⋆
30 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (5)

தண்ணெனவில்லை நமன் தமர்கள்⋆
    சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்⋆
மண்ணொடு நீரும் எரியும் காலும்⋆
    மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய்!
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம்⋆
    எண்ணினேன் என்னைக் குறிக் கொண்டென்றும்⋆
அண்ணலே! நீ என்னைக் காக்க வேண்டும்⋆
31 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (6)

செஞ்சொல் மறைப்பொருள் ஆகி நின்ற⋆
    தேவர்கள் நாயகனே! எம்மானே!
எஞ்சலில் என்னுடை இன் அமுதே!⋆
    ஏழ் உலகும் உடையாய்! என் அப்பா!
வஞ்ச உருவின் நமன் தமர்கள்⋆
    வலிந்து நலிந்தென்னைப் பற்றும்போது⋆
அஞ்சலம் என்றென்னைக் காக்க வேண்டும்⋆
32 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (7)

நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன்⋆
    நமன் தமர் பற்றி நலிந்திட்டு⋆ இந்த
ஊனே புகேயென்று மோதும்போது⋆ அங்-
    கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்⋆
வானேய் வானவர் தங்கள் ஈசா!⋆
    மதுரைப் பிறந்த மா மாயனே!⋆ என்
ஆனாய்! நீ என்னைக் காக்க வேண்டும்⋆
33 அரங்கத்தரவணைப் பள்ளியானே! (8)

குன்றெடுத்தாநிரை காத்த ஆயா!⋆
    கோநிரை மேய்த்தவனே! எம்மானே!⋆

அன்று முதல் இன்றறுதியா⋆
    ஆதியஞ்சோதி மறந்தறியேன்⋆
நன்றும் கொடிய நமன் தமர்கள்⋆
    நலிந்து வந்தென்னைப் பற்றும்போது⋆
அன்றங்கு நீ என்னைக் காக்க வேண்டும்⋆
34    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (9)

‡மாயவனை மதுசூதனனை⋆
    மாதவனை மறையோர்கள் ஏத்தும்⋆
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானை⋆
வேயர் புகழ் வில்லிபுத்தூர் மன்⋆
    விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்⋆
தூய மனத்தனர் ஆகி வல்லார்⋆
35    தூ மணிவண்ணனுக்காளர் தாமே (10)

## நாச்சியார் திருமொழி (1-11) - தாமுகக்கும்

‡தாம் உகக்கும் தம் கையில்⋆ சங்கமே போலாவோ⋆
    யாம் உகக்கும் எங்கையில்⋆ சங்கமும் ஏந்திழையீர்!⋆
தீ முகத்து நாகணை மேல்⋆ சேரும் திருவரங்கர்⋆
36    ஆ! முகத்தை நோக்கார் ஆல்⋆ அம்மனே! அம்மனே! (1)

எழில் உடைய அம்மனைமீர்!⋆ என் அரங்கத்தின் அமுதர்⋆
    குழல் அழகர் வாய் அழகர்⋆ கண் அழகர்⋆ கொப்பூழில்
எழு கமலப் பூ அழகர்⋆ எம் மானார்⋆ என்னுடைய
37    கழல் வளையைத்⋆ தாமும் கழல் வளையே ஆக்கினரே (2)

‡பொங்கோதம் சூழ்ந்த⋆ புவனியும் விண் உலகும்⋆
    அங்காதும் சோராமே⋆ ஆள்கின்ற எம் பெருமான்⋆
செங்கோல் உடைய⋆ திருவரங்கச் செல்வனார்⋆
38    எங்கோல் வளையால்⋆ இடர் தீர்வர் ஆகாதே (3)

www.prapatti.com

மச்சணி மாட⋆ மதிள் அரங்கர் வாமனனார்⋆
பச்சைப் பசுந் தேவர்⋆ தாம் பண்டு நீர் ஏற்ற⋆
பிச்சைக் குறை ஆகி⋆ என்னுடைய பெய்வளை மேல்⋆
39 இச்சை உடையரேல்⋆ இத் தெருவே போதாரே (4)

பொல்லாக் குறள் உருவாய்ப்⋆ பொற் கையில் நீர் ஏற்று⋆
எல்லா உலகும்⋆ அளந்து கொண்ட எம் பெருமான்⋆
நல்லார்கள் வாழும்⋆ நளிர் அரங்க நாகணையான்⋆
40 இல்லாதோம் கைப் பொருளும்⋆ எய்துவான் ஒத்துளனே (5)

கைப் பொருள்கள் முன்னமே⋆ கைக் கொண்டார்⋆ காவிரி நீர்
செய்ப் புரள ஓடும்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எப்பொருட்கும் நின்று⋆ ஆர்க்கும் எய்தாது⋆ நான் மறையின்
41 சொற் பொருளாய் நின்றார்⋆ என் மெய்ப் பொருளும் கொண்டாரே (6)

உண்ணாதுறங்காது⋆ ஒலி கடலை ஊடறுத்துப்⋆
பெண் ஆக்கை யாப்புண்டு⋆ தாம் உற்ற பேதெல்லாம்⋆
திண்ணார் மதிள் சூழ்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
42 எண்ணாதே தம்முடைய⋆ நன்மைகளே எண்ணுவரே (7)

‡பாசி தூர்த்துக் கிடந்த⋆ பார் மகட்குப்⋆ பண்டொருநாள்
மாசுடம்பில் நீர் வாரா⋆ மானம் இலாப் பன்றியாம்⋆
தேசுடைய தேவர்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
43 பேசி இருப்பனகள்⋆ பேர்க்கவும் பேராவே (8)

கண்ணாலம் கோடித்துக்⋆ கன்னி தன்னைக் கைப் பிடிப்பான்⋆
திண் ஆர்ந்திருந்த⋆ சிசுபாலன் தேசழிந்து⋆
அண்ணாந்திருக்கவே⋆ ஆங்கவளைக் கைப் பிடித்த⋆
44 பெண்ணாளன் பேணும் ஊர்⋆ பேரும் அரங்கமே (9)

‡செம்மை உடைய⋆ திருவரங்கர் தாம் பணித்த⋆
மெய்ம்மைப் பெரு வார்த்தை⋆ விட்டுசித்தர் கேட்டிருப்பர்⋆
தம்மை உகப்பாரைத்⋆ தாம் உகப்பர் என்னும் சொல்⋆
45 தம் இடையே பொய்யானால்⋆ சாதிப்பார் ஆர் இனியே! (10)

www.prapatti.com

## பெருமாள் திருமொழி (1-1) - இருளிரிய

‡இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி⋆
இனத் துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த⋆
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்⋆
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி⋆
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி⋆
திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும்⋆
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு⋆ என்
46 கண் இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே! (1)

‡வாயோர் ஈர் ஐஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த⋆
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ⋆
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல்⋆
மேன்மேலும் மிக எங்கும் பரந்த தன் கீழ்⋆
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக்⋆
கடி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மாயோனை மணத்தூணே பற்றி நின்று⋆ என்
47 வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே! (2)

எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி⋆ ஈர் இரண்டு முகமும் கொண்டு⋆
எம்மாடும் எழில் கண்கள் எட்டினோடும்⋆
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற⋆ செம் பொன்
அம்மான் தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற⋆
அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
அம்மான் தன் அடி இணைக் கீழ் அலர்கள் இட்டு⋆ அங்-
48 கடியவரோடென்று கொலோ அணுகும் நாளே! (3)

மாவினை வாய் பிளந்துகந்த மாலை⋆ வேலை
வண்ணணை என் கண்ணனை வன் குன்றம் ஏந்தி⋆
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயர் ஏற்றை⋆
அமரர்கள் தந் தலைவனை அந்தமிழின் இன்பப்-
பாவினை⋆ அவ் வடமொழியைப் பற்றற்றார்கள்⋆

www.prapatti.com

பயில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
கோவினை நாவுற வழுத்தி எந்தன் கைகள்⋆
49 கொய்ம் மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாளே! (4)

இணை இல்லா இன்னிசை யாழ் கெழுமி⋆ இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த⋆
துணை இல்லாத் தொன் மறை நூல் தோத்திரத்தால்⋆
தொன் மலர்க் கண் அயன் வணங்கி ஓவாதேத்த⋆
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ⋆
மதில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு⋆ என்
50 மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே! (5)

அளி மலர் மேல் அயன் அரன் இந்திரனோடு⋆ ஏனை
அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும்⋆
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும் உந்தித்⋆
திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும்⋆
களிமலர் சேர் பொழில் அரங்கத்துரகம் ஏறிக்⋆
கண் வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும்⋆
ஒளி மதி சேர் திரு முகமும் கண்டு கொண்டு⋆ என்
51 உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே! (6)

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்ச மாற்றி⋆
ஐம் புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம்
துறந்து⋆ இரு முப்பொழுதேத்தி எல்லை இல்லாத்
தொன்னெறிக் கண்⋆ நிலை நின்ற தொண்டரான⋆
அறம் திகழும் மனத்தவர் தம் கதியைப் பொன்னி⋆
அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
நிறம் திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்⋆
52 நீர் மல்க என்று கொலோ நிற்கும் நாளே! (7)

கோல் ஆர்ந்த நெடும் சார்ங்கம் கூனற் சங்கம்⋆
கொலை ஆழி கொடுந் தண்டு கொற்ற ஒள் வாள்⋆
கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் வென்றிக்⋆

கடும் பறவை இவை அனைத்தும் புறம் சூழ் காப்ப⋆
சேல் ஆர்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி⋆
53 வல் வினையேன் என்று கொலோ வாழும் நாளே! (8)

தூராத மனக் காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித்⋆ திருப் புகழ்கள் பலவும் பாடி⋆
ஆராத மனக் களிப்போடழுத கண்ணீர்⋆
மழை சோர நினைந்துருகி ஏத்தி⋆ நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப்⋆
54 பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே! (9)

‡வன் பெரு வானகம் உய்ய அமரர் உய்ய
மண் உய்ய⋆ மண் உலகில் மனிசர் உய்ய⋆
துன்ப மிகு துயர் அகல அயர்வொன்றில்லாச்
சுகம்வளர⋆ அக மகிழும் தொண்டர் வாழ⋆
அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும்⋆
அணி அரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள்⋆
இன்ப மிகு பெருங்குழுவு கண்டு⋆ யானும்
55 இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே! (10)

‡திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத்⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்⋆
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்⋆
குடை விளங்கு விறல் தானைக் கொற்ற ஒள் வாள்⋆
கூடலர் கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த⋆
நடை விளங்கு தமிழ் மாலை பத்தும் வல்லார்⋆
56 நலந் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே (11)

www.prapatti.com

## பெருமாள் திருமொழி (1-2) - தேட்டருந்திறல்

‡தேட்டருந் திறல் தேனினைத்⋆ தென்
அரங்கனைத்⋆ திரு மாது வாழ்
வாட்டம் இல் வனமாலை மார்வனை
வாழ்த்தி⋆ மால் கொள் சிந்தையராய்⋆
ஆட்ட மேவி அலந்தழைத்து⋆ அயர்-
வெய்தும் மெய் அடியார்கள் தம்⋆
ஈட்டம் கண்டிடக் கூடுமேல்⋆ அது
57 காணும் கண் பயன் ஆவதே (1)

தோடுலா மலர் மங்கை தோளிணை
தோய்ந்ததும்⋆ சுடர் வாளியால்⋆
நீடுமா மரம் செற்றதும் நிரை
மேய்த்ததும்⋆ இவையே நினைந்து⋆
ஆடிப்பாடி அரங்கவோ என்ற-
ழைக்கும்⋆ தொண்டரடிப் பொடி
ஆடநாம் பெறில்⋆ கங்கை நீர் குடைந்-
58 தாடும்⋆ வேட்கை என்னாவதே (2)

ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம்
கீண்டதும்⋆ முன் இராமனாய்⋆
மாறடர்த்ததும் மண் அளந்ததும்⋆
சொல்லிப் பாடி⋆ வண் பொன்னிப் பேர்
ஆறு போல் வரும் கண்ண நீர் கொண்டு⋆
அரங்கன் கோயில் திரு முற்றம்⋆
சேறு செய் தொண்டர் சேவடிச்⋆ செழும்
59 சேறென் சென்னிக்கணிவனே (3)

தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்டலும்⋆ உடன்றாய்ச்சி கண்டு⋆
ஆர்த்த தோள் உடை எம்பிரான்⋆ என்
அரங்கனுக்கடியார்கள் ஆய்⋆
நாத் தழும்பெழ நாரணா! என்ற-

மைழத்து⋆ மெய் தழும்பத் தொழு-
தேத்தி⋆ இன்புறும் தொண்டர் சேவடி⋆
60 ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே (4)

பொய் சிலைக் குரல் ஏற்றெருத்தம்
இறுத்துப்⋆ போரரவீர்த்த கோன்⋆
செய் சிலைச் சுடர் சூழ் ஒளித்⋆ திண்ண
மா மதிள் தென் அரங்கனாம்⋆
மெய் சிலைக் கரு மேகம் ஒன்று⋆ தம்
நெஞ்சுள் நின்று திகழப் போய்⋆
மெய் சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து⋆
61 என் மனம் மெய் சிலிர்க்குமே (5)

ஆதி அந்தம் அனந்தம் அற்புதம்
ஆன⋆ வானவர் தம் பிரான்⋆
பாதமா மலர் சூடும் பத்தி
இலாத⋆ பாவிகள் உய்ந்திட⋆
தீதில் நன்னெறி காட்டி⋆ எங்கும்
திரிந்தரங்கன் எம்மானுக்கே⋆
காதல் செய் தொண்டர்க்கெப்பிறப்பிலும்⋆
62 காதல் செய்யும் என் நெஞ்சமே (6)

கார் இனம் புரை மேனி நற் கதிர்⋆
முத்த வெண்ணகைச் செய்ய வாய்⋆
ஆர மார்வன் அரங்கன் என்னும்⋆
அரும் பெரும் சுடர் ஒன்றினைச்⋆
சேரும் நெஞ்சினர் ஆகிச் சேர்ந்து⋆
கசிந்திழிந்த கண்ணீர்களால்⋆
வார நிற்பவர் தாள் இணைக்கு⋆ ஒரு
63 வாரம் ஆகும் என் நெஞ்சமே (7)

மாலை உற்ற கடல் கிடந்தவன்⋆
வண்டு கிண்டு நறுந் துழாய்⋆
மாலை உற்ற வரைப் பெருந் திரு-

மார்வனை⋆ மலர்க் கண்ணனை⋆
மாலை உற்றெழுந்தாடிப் பாடித்⋆
திரிந்தரங்கன் எம்மானுக்கே⋆
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு⋆
64 மாலை உற்றதென் நெஞ்சமே (8)

மொய்த்துக் கண் பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப⋆ ஏங்கி இளைத்து நின்று⋆
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து⋆
ஆடிப் பாடி இறைஞ்சி⋆ என்
அத்தன் அச்சன் அரங்கனுக்கு⋆ அடி-
யார்கள் ஆகி⋆ அவனுக்கே
பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள்⋆
65 மற்றையார் முற்றும் பித்தரே (9)

‡அல்லி மா மலர் மங்கை நாதன்⋆
அரங்கன் மெய் அடியார்கள் தம்⋆
எல்லை இல் அடிமைத் திறத்தினில்⋆
என்றும் மேவு மனத்தனாம்⋆
கொல்லி காவலன் கூடல் நாயகன்⋆
கோழிக்கோன் குலசேகரன்⋆
சொல்லின் இந் தமிழ் மாலை வல்லவர்⋆
66 தொண்டர் தொண்டர்கள் ஆவரே (10)

## பெருமாள் திருமொழி (1-3) - மெய்யில்வாழ்க்கையை

‡மெய்யில் வாழ்க்கையை⋆ மெய் எனக் கொள்ளும்⋆ இவ்
வையம் தன்னொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஐயனே⋆ அரங்கா! என்றழைக்கின்றேன்⋆
67 மையல் கொண்டொழிந்தேன்⋆ என்தன் மாலுக்கே (1)

நூலினேர் இடையார்⋆ திறத்தே நிற்கும்⋆
ஞாலம் தன்னொடும்⋆ கூடுவதில்லை யான்⋆

www.prapatti.com

ஆலியா அழையா⋆ அரங்கா! என்று⋆
68 மால் எழுந்தொழிந்தேன்⋆ என்தன் மாலுக்கே (2)

மாரனார்⋆ வரி வெஞ்சிலைக்காட் செய்யும்⋆
பாரினாரொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஆர மார்வன்⋆ அரங்கன் அனந்தன்⋆ நல்
69 நாரணன்⋆ நரகாந்தகன் பித்தனே (3)

உண்டியே உடையே⋆ உகந்தோடும்⋆ இம்
மண்டலத்தொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
அண்ட வாணன்⋆ அரங்கன் வன் பேய் முலை⋆
70 உண்ட வாயன் தன்⋆ உன்மத்தன் காண்மினே (4)

தீதில் நன்னெறி நிற்க⋆ அல்லாது செய்⋆
நீதி யாரொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஆதி ஆயன்⋆ அரங்கன் அந் தாமரைப்⋆
71 பேதை மா மணவாளன் தன்⋆ பித்தனே (5)

எம் பரத்தர்⋆ அல்லாரொடும் கூடலன்⋆
உம்பர் வாழ்வை⋆ ஒன்றாகக் கருதிலன்⋆
தம் பிரான் அமரர்க்கு⋆ அரங்க நகர்⋆
72 எம் பிரானுக்கு⋆ எழுமையும் பித்தனே (6)

எத்திறத்திலும்⋆ யாரொடும் கூடும்⋆ அச்-
சித்தந் தன்னைத்⋆ தவிர்த்தனன் செங்கண் மால்⋆
அத்தனே!⋆ அரங்கா! என்றழைக்கின்றேன்⋆
73 பித்தனாய் ஒழிந்தேன்⋆ எம் பிரானுக்கே (7)

பேயரே⋆ எனக்கு யாவரும்⋆ யானும் ஓர்
பேயனே⋆ எவர்க்கும் இது பேசி என்⋆
ஆயனே!⋆ அரங்கா! என்றழைக்கின்றேன்⋆
74 பேயனாய் ஒழிந்தேன்⋆ எம் பிரானுக்கே (8)

‡அங்கை ஆழி⋆ அரங்கன் அடி இணை⋆
தங்கு சிந்தைத்⋆ தனிப் பெரும் பித்தனாய்⋆

www.prapatti.com

கொங்கர் கோன்⋆ குலசேகரன் சொன்ன சொல்⋆
75 இங்கு வல்லவர்க்கு⋆ ஏதம் ஒன்றில்லையே (9)

## பெருமாள் திருமொழி (1-8) - மன்னு புகழ்

‡தேவரையும் அசுரரையும்⋆ திசைகளையும் படைத்தவனே⋆
யாவரும் வந்தடிவணங்க⋆ அரங்க நகர்த் துயின்றவனே⋆
காவிரி நல் நதி பாயும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
76 ஏவரி வெஞ்சிலை வலவா⋆ இராகவனே! தாலேலோ! (10)

## திருமழிசையாழ்வார் - திருச்சந்த விருத்தம்

அரங்கனே! தரங்கநீர்⋆ கலங்க அன்று குன்று சூழ்⋆
மரங்கள் தேய மாநிலம் குலுங்க⋆ மாசுணம் சுலாய்⋆
நெருங்கநீ கடைந்த போது⋆ நின்ற சூரர் என் செய்தார்⋆
77 குரங்கை ஆள் உகந்த எந்தை!⋆ கூறு தேற வேறிதே (21)

‡கொண்டை கொண்ட கோதை மீது⋆ தேன் உலாவு கூனி கூன்⋆
உண்டை கொண்டரங்க ஓட்டி⋆ உள் மகிழ்ந்த நாதன் ஊர்⋆
நண்டை உண்டு நாரை பேர⋆ வாளை பாய நீலமே⋆
78 அண்டை கொண்டு கெண்டை மேயும்⋆ அந்தணீர் அரங்கமே (49)

வெண் திரைக் கருங்கடல்⋆ சிவந்துவேவ முன் ஓர் நாள்⋆
திண் திறல் சிலைக்கை வாளி⋆ விட்டவீரர் சேரும் ஊர்⋆
எண் திசைக் கணங்களும்⋆ இறைஞ்சி ஆடு தீர்த்த நீர்⋆
79 வண்டிரைத்த சோலைவேலி⋆ மன்னுசீர் அரங்கமே (50)

சரங்களைத் துரந்து⋆ வில் வளைத்திலங்கை மன்னவன்⋆
சிரங்கள் பத்தறுத்துதிர்த்த⋆ செல்வர் மன்னு பொன்னிடம்⋆
பரந்து பொன் நிரந்து நுந்தி⋆ வந்தலைக்கும் வார் புனல்⋆
80 அரங்கம் என்பர்⋆ நான் முகத்தயன் பணிந்த கோயிலே (51)

பொற்றை உற்ற முற்றல் யானை⋆ போர் எதிர்ந்து வந்ததை⋆
பற்றி உற்று மற்றதன்⋆ மருப்பொசித்த பாகன் ஊர்⋆

சிற்றெயிற்று முற்றல் மூங்கில்⋆ மூன்று தண்டர் ஒன்றினர்⋆
81 அற்ற பற்றர் சுற்றி வாழும்⋆ அந்தணீர் அரங்கமே (52)

மோடி யோடிலச்சையாய⋆ சாபம் எய்தி முக்கணான்⋆
கூடுசேனை மக்களோடு⋆ கொண்டு மண்டி வெஞ்சம-
த்தோட⋆ வாணன் ஆயிரம் கரம் கழித்த⋆ ஆதி மால்⋆
82 பீடு கோயில் கூடு நீர்⋆ அரங்கம் என்ற பேரதே (53)

இலைத்தலைச் சரம் துரந்து⋆ இலங்கை கட்டழித்தவன்⋆
மலைத்தலைப் பிறந்திழிந்து⋆ வந்து நுந்து சந்தனம்⋆
குலைத்தலைத்திறுத்தெறிந்த⋆ குங்குமக் குழம்பினோடு⋆
83 அலைத்தொழுகு காவிரி⋆ அரங்கமேய அண்ணலே (54)

மன்னு மா மலர்க் கிழத்தி⋆ வைய மங்கை மைந்தனாய்⋆
பின்னும் ஆயர் பின்னை தோள்⋆ மணம் புணர்ந்ததன்றியும்⋆
உன்ன பாதம் என்ன சிந்தை⋆ மன்ன வைத்து நல்கினாய்⋆
84 பொன்னி சூழ் அரங்கமேய⋆ புண்டரீகன் அல்லையே (55)

சுரும்பரங்கு தண் துழாய்⋆ துதைந்தலர்ந்த பாதமே⋆
விரும்பி நின்றிறைஞ்சு வேற்கு⋆ இரங்கரங்க வாணனே⋆
கரும்பிருந்த கட்டியே!⋆ கடல் கிடந்த கண்ணனே⋆
85 இரும்பரங்க வெஞ்சரம்⋆துரந்த வில் இராமனே! (93)

‡பொன்னி சூழ் அரங்கமேய⋆ பூவை வண்ண! மாய! கேள்⋆
என்னதாவி என்னும்⋆ வல்வினையினுள் கொழுந்தெழுந்து⋆
உன்ன பாதம் என்ன நின்ற⋆ ஒண்சுடர்க் கொழுமலர்⋆
86 மன்ன வந்து பூண்டு⋆ வாட்டம் இன்றி எங்கும் நின்றதே (119)

## தொண்டரடிப்பொடியாழ்வார் - திருமாலை

‡காவல் இல் புலனை வைத்துக்⋆ கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து⋆
நாவலிட்டுழி தருகின்றோம்⋆ நமன் தமர் தலைகள் மீதே⋆
மூவுலகுண்டுமிழ்ந்த⋆ முதல்வ! நின் நாமம் கற்ற⋆
87 ஆவலிப் புடைமை கண்டாய்⋆ அரங்க மா நகருளானே! (1)

‡பச்சை மா மலை போல் மேனி⋆ பவள வாய் கமலச் செங்கண்⋆
அச்சுதா! அமரர் ஏறே!⋆ ஆயர் தம் கொழுந்தே! என்னும்⋆
இச்சுவை தவிர யான் போய்⋆ இந்திர லோகம் ஆளும்⋆
88 அச்சுவை பெறினும் வேண்டேன்⋆ அரங்க மா நகருளானே! (2)

வேத நூல் பிராயம் நூறு⋆ மனிசர் தாம் புகுவரேலும்⋆
பாதியும் உறங்கிப் போகும்⋆ நின்றதில் பதினை ஆண்டு⋆
பேதை பாலகன் அதாகும்⋆ பிணி பசி மூப்புத் துன்பம்⋆
89 ஆதலால் பிறவி வேண்டேன்⋆ அரங்க மா நகருளானே! (3)

மொய்த்த வல் வினையுள் நின்று⋆ மூன்றெழுத்துடைய பேரால்⋆
கத்திர பந்தும் அன்றே⋆ பராங்கதி கண்டு கொண்டான்⋆
இத்தனை அடியர் ஆனார்க்கு⋆ இரங்கும் நம் அரங்கனாய⋆
90 பித்தனைப் பெற்றும் அந்தோ!⋆ பிறவியுள் பிணங்குமாறே! (4)

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்⋆
பெரியதோர் இடும்பை பூண்டு⋆
உண்டிராக் கிடக்கும் போது⋆
உடலுக்கே கரைந்து நைந்து⋆
தண் துழாய் மாலை மார்பன்⋆
தமர்களாய்ப் பாடி ஆடி⋆
தொண்டு பூண்டமுதம் உண்ணாத்⋆
91 தொழும்பர் சோறுகக்குமாறே! (5)

மறம் சுவர் மதிள் எடுத்து⋆ மறுமைக்கே வெறுமை பூண்டு⋆
புறம் சுவர் ஓட்டை மாடம்⋆ புரளும் போதறிய மாட்டீர்⋆
அறம் சுவர் ஆகி நின்ற⋆ அரங்கனார்க்காட் செய்யாதே⋆
92 புறம் சுவர்க் கோலஞ்செய்து⋆ புள் கௌவக் கிடக்கின்றீரே! (6)

புலை அறம் ஆகி நின்ற⋆ புத்தொடு சமணம் எல்லாம்⋆
கலை அறக்கற்ற மாந்தர்⋆ காண்பரோ கேட்பரோ தாம்⋆
தலை அறுப்புண்டும் சாவேன்⋆ சத்தியம் காண்மின் ஐயா⋆
93 சிலையினால் இலங்கை செற்ற⋆ தேவனே தேவன் ஆவான் (7)

www.prapatti.com

வெறுப்பொடு சமணர் முண்டர்⋆ விதி இல் சாக்கியர்கள்⋆ நின் பால்
பொறுப்பரியனகள் பேசில்⋆ போவதே நோயதாகி⋆
குறிப்பெனக்கடையும் ஆகில்⋆ கூடுமேல் தலையை ஆங்கே⋆
94 அறுப்பதே கருமம் கண்டாய்⋆ அரங்க மா நகருளானே! (8)

மற்றும் ஓர் தெய்வம் உண்டே⋆ மதி இலா மானிடங்காள்⋆
உற்ற போதன்றி நீங்கள்⋆ ஒருவன் என்றுணர மாட்டீர்⋆
அற்ற மேல் ஒன்றறீயீர்⋆ அவன் அல்லால் தெய்வம் இல்லை⋆
95 கற்றினம் மேய்த்த எந்தை⋆ கழல் இணை பணிமின் நீரே (9)

நாட்டினான் தெய்வம் எங்கும்⋆ நல்லதோர் அருள் தன்னாலே⋆
காட்டினான் திருவரங்கம்⋆ உய்பவர்க்குய்யும் வண்ணம்⋆
கேட்டிரே நம்பிமீர்காள்!⋆ கெருட வாகனனும் நிற்கச்⋆
96 சேட்டை தன் மடியகத்துச்⋆ செல்வம் பார்த்திருக்கின்றீரே (10)

ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து⋆ உலகங்கள் உய்யச்⋆
செருவிலே அரக்கர் கோனைச்⋆ செற்ற நம் சேவகனார்⋆
மருவிய பெரிய கோயில்⋆ மதில் திருவரங்கம் என்னா⋆
97 கருவிலே திரு இலாதீர்!⋆ காலத்தைக் கழிக்கின்றீரே (11)

நமனும் முற்கலனும் பேச⋆ நரகில் நின்றார்கள் கேட்க⋆
நரகமே சுவர்க்கம் ஆகும்⋆ நாமங்கள் உடைய நம்பி⋆
அவனதூர் அரங்கம் என்னாது⋆ அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர்⋆
98 கவலையுள் படுகின்றார் என்று⋆ அதனுக்கே கவல்கின்றேனே! (12)

எறியு நீர் வெறி கொள் வேலை⋆ மா நிலத்துயிர்கள் எல்லாம்⋆
வெறி கொள் பூந் துளவ மாலை⋆ விண்ணவர் கோனை ஏத்த⋆
அறிவிலா மனிசர் எல்லாம்⋆ அரங்கம் என்றழைப்பர் ஆகில்⋆
99 பொறியில் வாழ் நரகம் எல்லாம்⋆ புல் எழுந்தொழியும் அன்றே (13)

‡வண்டினம் முரலும் சோலை⋆ மயில் இனம் ஆலும் சோலை⋆
கொண்டல் மீதணவும் சோலை⋆ குயில் இனம் கூவும் சோலை⋆
அண்டர் கோன் அமரும் சோலை⋆ அணி திருவரங்கம் என்னா⋆
100 மிண்டர்பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி⋆ நாய்க்கிடுமினீரே (14)



www.prapatti.com

மெய்யர்க்கே மெய்யன் ஆகும்⋆ விதி இலா என்னைப் போல⋆
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்⋆ புட்கொடி உடைய கோமான்⋆
உய்யப் போம் உணர்வினார்கட்கு⋆ ஒருவன் என்றுணர்ந்த பின்னை⋆
101 ஐயப்பாடறுத்துத் தோன்றும்⋆ அழகன் ஊர் அரங்கம் அன்றே (15)

சூதனாய்க் கள்வன் ஆகித்⋆ தூர்த்தரோடிசைந்த காலம்⋆
மாதரார் கயற் கண் என்னும்⋆ வலையுள் பட்டழுந்து வேனைப்⋆
போதரே என்று சொல்லிப்⋆ புந்தியுள் புகுந்து⋆ தன் பால்
102 ஆதரம் பெருக வைத்த⋆ அழகன் ஊர் அரங்கம் அன்றே (16)

விரும்பி நின்றேத்த மாட்டேன்⋆ விதி இலேன் மதி ஒன்றில்லை⋆
இரும்பு போல் வலிய நெஞ்சம்⋆ இறையிறை உருகும் வண்ணம்⋆
சுரும்பமர் சோலை சூழ்ந்த⋆ அரங்க மா கோயில் கொண்ட⋆
103 கரும்பினைக் கண்டு கொண்டு⋆ என் கண்ணிணை களிக்குமாறே! (17)

இனி திரைத் திவலை மோத⋆ எறியும் தண் பரவை மீதே⋆
தனி கிடந்தரசு செய்யும்⋆ தாமரைக் கண்ணன் எம்மான்⋆
கனி இருந்தனைய செவ்வாய்க்⋆ கண்ணனைக் கண்ட கண்கள்⋆
104 பனி அரும்பு திருமாலோ⋆ என் செய்கேன் பாவி யேனே! (18)

‡குட திசை முடியை வைத்துக்⋆ குண திசை பாதம் நீட்டி⋆
வட திசை பின்பு காட்டித்⋆ தென் திசை இலங்கை நோக்கி⋆
கடல் நிறக் கடவுள் எந்தை⋆ அரவணைத் துயிலுமா கண்டு⋆
105 உடல் எனக்குருகும் ஆலோ⋆ என் செய்கேன் உலகத்தீரே! (19)

பாயு நீர் அரங்கந் தன்னுள்⋆ பாம்பணைப் பள்ளி கொண்ட⋆
மாயனார் திரு நன் மார்பும்⋆ மரகத உருவும் தோளும்⋆
தூய தாமரைக் கண்களும்⋆ துவர் இதழ்ப் பவள வாயும்⋆
106 ஆய சீர் முடியும் தேசும்⋆ அடியரோர்க்ககலலாமே (20)

பணிவினால் மனமதொன்றிப்⋆ பவள வாய் அரங்கனார்க்குத்⋆
துணிவினால் வாழ மாட்டாத்⋆ தொல்லை நெஞ்சே! நீ சொல்லாய்⋆
அணியினார் செம் பொன் ஆய⋆ அருவரை அனைய கோயில்⋆
107 மணி அனார் கிடந்த ஆற்றை⋆ மனத்தினால் நினைக்கலாமே (21)

பேசிற்றே பேசல் அல்லால்⋆ பெருமை ஒன்றுணரல் ஆகாது⋆
ஆசற்றார் தங்கட்கல்லால்⋆ அறியல் ஆவானும் அல்லன்⋆
மாசற்றார் மனத்துளானை⋆ வணங்கி நாம் இருப்பதல்லால்⋆
108 பேசத்தான் ஆவதுண்டோ⋆ பேதை நெஞ்சே! நீ சொல்லாய் (22)

கங்கையின் புனிதம் ஆய⋆ காவிரி நடுவு பாட்டு⋆
பொங்கு நீர் பரந்து பாயும்⋆ பூம் பொழில் அரங்கந் தன்னுள்⋆
எங்கள் மால் இறைவன் ஈசன்⋆ கிடந்ததோர் கிடக்கை கண்டும்⋆
109 எங்ஙனம் மறந்து வாழ்கேன்⋆ ஏழையேன் ஏழையேனே! (23)

வெள்ள நீர் பரந்து பாயும்⋆ விரி பொழில் அரங்கந் தன்னுள்⋆
கள்வனார் கிடந்த வாறும்⋆ கமல நன் முகமும் கண்டும்⋆
உள்ளமே! வலியை போலும்⋆ ஒருவன் என்றுணர மாட்டாய்⋆
110 கள்ளமே காதல் செய்து⋆ உன் கள்ளத்தே கழிக்கின்றாயே! (24)

குளித்து மூன்றனலை ஓம்பும்⋆ குறி கொள் அந்தணமை தன்னை⋆
ஒளித்திட்டேன் என் கண் இல்லை⋆ நின் கணும் பத்தன் அல்லேன்⋆
களிப்பதென் கொண்டு நம்பீ!⋆ கடல் வண்ணா! கதறுகின்றேன்⋆
111 அளித்தெனக்கருள் செய் கண்டாய்⋆ அரங்க மா நகருளானே! (25)

போதெல்லாம் போது கொண்டு⋆ உன் பொன்னடி புனைய மாட்டேன்⋆
தீதிலா மொழிகள் கொண்டு⋆ உன் திருக்குணம் செப்ப மாட்டேன்⋆
காதலால் நெஞ்சம் அன்பு⋆ கலந்திலேன் அது தன்னாலே⋆
112 ஏதிலேன் அரங்கர்க்கெல்லே!⋆ என் செய்வான் தோன்றினேனே! (26)

குரங்குகள் மலையை நூக்கக்⋆ குளித்துத் தாம் புரண்டிட்டோடி⋆
தரங்க நீர் அடைக்கல் உற்ற⋆ சலம் இலா அணிலும் போலேன்⋆
மரங்கள் போல் வலிய நெஞ்ச⋆ வஞ்சனேன் நெஞ்சு தன்னால்⋆
113 அரங்கனார்க்காட் செய்யாதே⋆ அளியத்தேன் அயர்க்கின்றேனே! (27)

உம்பரால் அறியல் ஆகா⋆ ஒளி உளார் ஆனைக்காகி⋆
செம் புலால் உண்டு வாழும்⋆ முதலை மேல் சீறி வந்தார்⋆
நம் பரம் ஆயதுண்டே⋆ நாய்களோம் சிறுமை ஓரா⋆
114 எம்பிராற்காட் செய்யாதே⋆ என் செய்வான் தோன்றினேனே! (28)

ஊர் இலேன் காணி இல்லை⋆ உறவு மற்றொருவர் இல்லை⋆
பாரில் நின் பாத மூலம்⋆ பற்றிலேன் பரம மூர்த்தி⋆
கார் ஒளி வண்ணனே!⋆ கண்ணனே! கதறுகின்றேன்⋆
115 ஆர் உளர் களை கண் அம்மா!⋆ அரங்க மா நகருளானே! (29)

மனத்தில் ஓர் தூய்மை இல்லை⋆ வாயில் ஓர் இன் சொல் இல்லை⋆
சினத்தினால் செற்றம் நோக்கித்⋆ தீ விளி விளிவன் வாளா⋆
புனத்துழாய் மாலையானே!⋆ பொன்னி சூழ் திருவரங்கா⋆
116 எனக்கினிக் கதி என் சொல்லாய்⋆ என்னை ஆளுடைய கோவே! (30)

தவத்துளார் தம்மில் அல்லேன்⋆ தனம் படைத்தாரில் அல்லேன்⋆
உவர்த்த நீர் போல⋆ என் தன் உற்றவர்க்கொன்றும் அல்லேன்⋆
துவர்த்த செவ்வாயினார்க்கே⋆ துவக்கறத் துரிசன் ஆனேன்⋆
117 அவத்தமே பிறவி தந்தாய்⋆ அரங்க மா நகருளானே! (31)

ஆர்த்து வண்டலம்பும் சோலை⋆ அணி திருவரங்கந் தன்னுள்⋆
கார்த் திரள் அனைய மேனிக்⋆ கண்ணனே! உன்னைக் காணும்⋆
மார்க்கம் ஒன்றறிய மாட்டா⋆ மனிசரில் துரிசனாய⋆
118 மூர்க்கனேன் வந்து நின்றேன்⋆ மூர்க்கனேன் மூர்க்கனேனே (32)

மெய் எல்லாம் போக விட்டு⋆ விரி குழலாரில் பட்டு⋆
பொய் எல்லாம் பொதிந்து கொண்ட⋆ போழ்க்கனேன் வந்து நின்றேன்⋆
ஐயனே! அரங்கனே!⋆ உன் அருள் என்னும் ஆசை தன்னால்⋆
119 பொய்யனேன் வந்து நின்றேன்⋆ பொய்யனேன் பொய்யனேனே (33)

உள்ளத்தே உறையும் மாலை⋆
உள்ளுவான் உணர்வொன்றில்லாக்⋆
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்⋆
தொண்டுக்கே கோலம் பூண்டு⋆
உள்ளுவார் உள்ளிற்றெல்லாம்⋆
உடன் இருந்தறிதி என்று⋆
வெள்கிப்போய் என்னுள்ளே நான்⋆
120 விலவறச் சிரித்திட்டேனே! (34)

www.prapatti.com

தாவி அன்றுலகம் எல்லாம்⋆ தலைவிளாக்கொண்ட எந்தாய்⋆
சேவியேன் உன்னை அல்லால்⋆ சிக்கெனச் செங்கண் மாலே⋆
ஆவியே! அமுதே⋆ என் தன் ஆர் உயிர் அனைய எந்தாய்⋆
121 பாவியேன் உன்னை அல்லால்⋆ பாவியேன் பாவியேனே (35)

மழைக்கன்று வரை முன் ஏந்தும்⋆ மைந்தனே! மதுர ஆறே⋆
உழைக்கன்றே போல⋆ நோக்கம் உடையவர் வலையுள் பட்டு⋆
உழைக்கின்றேற்கு⋆ என்னை நோக்காதொழிவதே⋆ உன்னை அன்றே
122 அழைக்கின்றேன் ஆதி மூர்த்தி!⋆ அரங்க மா நகருளானே! (36)

தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ்⋆ திருவரங்கத்துள் ஓங்கும்⋆
ஒளி உளார் தாமே அன்றே⋆ தந்தையும் தாயும் ஆவார்⋆
எளியதோர் அருளும் அன்றே⋆ என் திறத்தெம் பிரானார்⋆
123 அளியன் நம் பையல் என்னார்⋆ அம்மவோ! கொடியவாறே! (37)

மேம் பொருள் போக விட்டு⋆ மெய்ம்மையை மிக உணர்ந்து⋆
ஆம்பரிசறிந்து கொண்டு⋆ ஐம் புலன் அகத்தடக்கி⋆
காம்பறத் தலை சிரைத்து⋆ உன் கடைத்தலை இருந்து வாழும்⋆
124 சோம்பரை உகத்தி போலும்⋆ சூழ் புனல் அரங்கத்தானே! (38)

அடிமையில் குடிமை இல்லா⋆ அயல் சதுப்பேதி மாரில்⋆
குடிமையில் கடைமை பட்ட⋆ குக்கரில் பிறப்பர் ஏலும்⋆
முடியினில் துளபம் வைத்தாய்!⋆ மொய் கழற்கன்பு செய்யும்⋆
125 அடியரை உகத்தி போலும்⋆ அரங்க மா நகருளானே! (39)

திருமறு மார்வ! நின்னைச்⋆ சிந்தையுள் திகழ வைத்து⋆
மருவிய மனத்தர் ஆகில்⋆ மா நிலத்துயிர்கள் எல்லாம்⋆
வெருவறக்கொன்று சுட்டிட்டு⋆ ஈட்டிய வினையர் ஏலும்⋆
126 அரு வினைப் பயன் அதுய்யார்⋆ அரங்க மா நகருளானே! (40)

வான் உளார் அறியல் ஆகா⋆ வானவா! என்பர் ஆகில்⋆
தேன் உலாம் துளப மாலைச்⋆ சென்னியாய்! என்பர் ஆகில்⋆
ஊனம் ஆயினகள் செய்யும்⋆ ஊனகாரகர்களேலும்⋆
127 போனகம் செய்த சேடம்⋆ தருவரேல் புனிதம் அன்றே (41)

www.prapatti.com

பழுதிலா ஒழுகல் ஆற்றுப்⋆ பல சதுப்பேதி மார்கள்⋆
இழி குலத்தவர்களேலும்⋆ எம் அடியார்கள் ஆகில்⋆
தொழுமினீர் கொடுமின் கொண்மின்! என்று⋆ நின்னோடும் ஒக்க⋆
128 வழி பட அருளினாய் போல்⋆ மதிள் திருவரங்கத்தானே! (42)

அமர ஓர் அங்கம் ஆறும்⋆ வேதம் ஓர் நான்கும் ஓதித்⋆
தமர்களில் தலைவராய⋆ சாதி அந்தணர்களேலும்⋆
நுமர்களைப் பழிப்பர் ஆகில்⋆ நொடிப்பதோர் அளவில்⋆ ஆங்கே
129 அவர்கள் தாம் புலையர் போலும்⋆ அரங்க மா நகருளானே! (43)

‡பெண் உலாம் சடையினானும்⋆ பிரமனும் உன்னைக் காண்பான்⋆
எண் இலா ஊழி ஊழி⋆ தவம் செய்தார் வெள்கி நிற்ப⋆
விண் உளார் வியப்ப வந்து⋆ ஆனைக்கன்றருளை ஈந்த
130 கண்ணறா!⋆ உன்னை என்னோ⋆ களைகணாக் கருதுமாறே! (44)

‡வளவெழும் தவள மாட⋆ மதுரை மா நகரந் தன்னுள்⋆
கவளமால் யானை கொன்ற⋆ கண்ணனை அரங்க மாலை⋆
துளவத் தொண்டாய தொல் சீர்த்⋆ தொண்டரடிப்பொடி சொல்⋆
131 இளைய புன் கவிதை ஏலும்⋆ எம்பிராற்கினிய வாறே! (45)

### தொண்டரடிப்பொடியாழ்வார் - திருப்பள்ளியெழுச்சி

‡கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்⋆
கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்⋆
மது விரிந்தொழுகின மாமலர் எல்லாம்⋆
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி⋆
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த⋆
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும்⋆
அதிர்தலில் அலை கடல் போன்றுளதெங்கும்⋆
132 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (1)

கொழுங்கொடி முல்லையின் கொழு மலரணவிக்⋆
கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ⋆
எழுந்தன மலர் அணைப் பள்ளிகொண்டன்னம்⋆

www.prapatti.com

ஈன் பனி நனைந்த தம் இருஞ்சிறகுதறி⋆
விழுங்கிய முதலையின் பிலம் புரை பேழ்வாய்⋆
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி⋆
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த⋆
133 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (2)

சுடர் ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம்⋆
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்⋆
படர் ஒளி பசுத்தனன் பனி மதி இவனோ⋆
பாயிருள் அகன்றது பைம் பொழிற் கமுகின்⋆
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற⋆
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ⋆
அடல் ஒளி திகழ் தரு திகிரியந் தடக்கை⋆
134 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (3)

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்⋆
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும்⋆
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்⋆
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை⋆
வாட்டிய வரிசிலை வானவரேறே!⋆
மா முனி வேள்வியைக் காத்து⋆ அவபிரதம்
ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே!⋆
135 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (4)

புலம்பின புட்களும் பூம் பொழில்களின் வாய்⋆
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி⋆
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்⋆
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த⋆
அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான்⋆
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா⋆
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்⋆
136 எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே (5)

www.prapatti.com

இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ⋆
    இறையவர் பதினொரு விடையரும் இவரோ⋆
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ⋆
    மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி⋆
புரவியோடாடலும் பாடலும் தேரும்⋆
    குமர தண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்⋆
அருவரை அனையநின் கோயில் முன் இவரோ⋆
137 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (6)

அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ⋆
    அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ⋆
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ⋆
    எம்பெருமான் உன் கோயிலின் வாசல்⋆
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க⋆
    இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்⋆
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ⋆
138 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (7)

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க⋆
    மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா⋆
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு⋆
    ஏற்பன வாயின கொண்டு நன் முனிவர்⋆
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ⋆
    தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி⋆
அம்பர தலத்தில் நின்றகல்கின்றதிருள் போய்⋆
139 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (8)

‡ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி⋆
    யாழ் குழல் முழவமோடிசை திசை கெழுமி⋆
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்⋆
    கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம்⋆
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்⋆
    சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்⋆



www.prapatti.com

ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள⋆
140 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (9)

‡கடி மலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ⋆
கதிரவன் கனை கடல் முளைத்தனன் இவனோ⋆
துடியிடையார் சுரி குழல் பிழிந்துதறித்⋆
துகில் உடுத்தேறினர் சூழ் புனல் அரங்கா⋆
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து⋆
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை⋆ அளியன் என்றருளி உன் அடியார்க்-
141 காட்படுத்தாய்!⋆ பள்ளி எழுந்தருளாயே! (10)

## திருப்பாணாழ்வார் - அமலனாதி பிரான்

‡அமலன் ஆதி பிரான்⋆ அடியார்க்கென்னை ஆட்படுத்த
விமலன்⋆ விண்ணவர் கோன்⋆ விரையார் பொழில் வேங்கடவன்⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன்⋆ நீள் மதிள் அரங்கத்தம்மான்⋆ திருக்-
142 கமல பாதம் வந்து⋆ என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே (1)

உவந்த உள்ளத்தனாய்⋆ உலகம் அளந்தண்டம் உற⋆
நிவந்த நீள் முடியன்⋆ அன்று நேர்ந்த நிசாசரரைக்⋆
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்⋆ கடி-
யார் பொழில் அரங்கத்தம்மான்⋆ அரைச்-
143 சிவந்த ஆடையின் மேல்⋆ சென்றதாம் என் சிந்தனையே (2)

‡மந்தி பாய்⋆ வட வேங்கட மா மலை⋆ வானவர்கள்
சந்தி செய்ய நின்றான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆
அந்தி போல் நிறத்தாடையும்⋆ அதன்
மேல் அயனைப் படைத்ததோர் எழில்⋆
144 உந்தி மேலதன்றோ⋆ அடியேன் உள்ளத்தின் உயிரே (3)

சதுர மா மதிள் சூழ்⋆ இலங்கைக்கிறைவன் தலைபத்-
துதிர ஓட்டி⋆ ஓர் வெங்கணை உய்த்தவன்⋆ ஓத வண்ணன்⋆

www.prapatti.com

மதுர மா வண்டு பாட⋆ மா மயில் ஆடரங்கத்தம்மான்⋆ திரு வயிற்-
145 றுதர பந்தம்⋆ என் உள்ளத்துள் நின்றுலாகின்றதே (4)

பாரம் ஆய⋆ பழவினை பற்றறுத்து⋆ என்னைத் தன்
வாரம் ஆக்கி வைத்தான்⋆ வைத்ததன்றி என்னுள் புகுந்தான்⋆
கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன்⋆ அரங்கத்தம்மான்⋆ திரு
146 ஆர மார்வதன்றோ⋆ அடியேனை ஆட்கொண்டதே (5)

துண்ட வெண்பிறையன்⋆ துயர் தீர்த்தவன்⋆ அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில் சூழ்⋆ அரங்க நகர் மேய அப்பன்⋆
அண்டர் அண்ட பகிரண்டத்து⋆ ஒரு மாநிலம் எழுமால் வரை⋆ முற்றும்
147 உண்ட கண்டம் கண்டீர்⋆ அடியேனை உய்யக்கொண்டதே (6)

கையின் ஆர்⋆ சுரி சங்கனல் ஆழியர்⋆ நீள்வரை போல்
மெய்யனார்⋆ துளப விரையார் கமழ் நீண் முடி எம்
ஐயனார்⋆ அணி அரங்கனார்⋆ அரவின் அணைமிசை மேய மாயனார்⋆
148 செய்ய வாய் ஐயோ!⋆ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே! (7)

பரியன் ஆகி வந்த⋆ அவுணன் உடல் கீண்ட⋆ அமரர்க்-
கரிய ஆதிப் பிரான்⋆ அரங்கத்தமலன் முகத்து⋆
கரிய ஆகிப் புடை பரந்து⋆ மிளிர்ந்து செவ்வரி ஓடி⋆ நீண்ட அப்-
149 பெரிய வாய கண்கள்⋆ என்னைப் பேதைமை செய்தனவே! (8)

‡ஆலமா மரத்தின் இலைமேல்⋆ ஒரு பாலகனாய்⋆
ஞாலம் ஏழும் உண்டான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆
கோலமா மணி ஆரமும்⋆ முத்துத் தாமமும் முடிவில்லதோர் எழில்⋆
150 நீல மேனி ஐயோ!⋆ நிறை கொண்டதென் நெஞ்சினையே! (9)

‡கொண்டல் வண்ணனைக்⋆ கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்⋆ என் உள்ளம் கவர்ந்தானை⋆
அண்டர் கோன் அணி அரங்கன்⋆ என் அமுதினைக்
151 கண்ட கண்கள்⋆ மற்றொன்றினைக் காணாவே (10)

www.prapatti.com

## பெரிய திருமொழி (1-8) - கொங்கலர்ந்த

‡பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம்⋆
இரங்க வன் பேய் முலை⋆
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை⋆
பிரான் அவன் பெருகும் இடம்⋆
வெள்ளியான் கரியான்⋆ மணி நிற
வண்ணன் என்றெண்ணி⋆ நாள் தொறும்
தெள்ளியார் வணங்கும் மலை⋆ திரு-
152 வேங்கடம் அடை நெஞ்சமே (2)

## பெரிய திருமொழி (3-7) - கள்வன்கொல்

‡என் துணை என்றெடுத்தேற்கு⋆ இறையேனும் இரங்கிற்றிலள்⋆
தன் துணையாய என்தன்⋆ தனிமைக்கும் இரங்கிற்றிலள்⋆
வன் துணை வானவர்க்காய்⋆ வரம் செற்றரங்கத்துறையும்⋆
153 இன் துணைவன்னொடும் போய்⋆ எழில் ஆலி புகுவர் கொலோ (6)

## பெரிய திருமொழி (5-4) - உந்திமேல்

‡உந்திமேல் நான்முகனைப் படைத்தான்⋆ உலகுண்டவன்
எந்தை பெம்மான்⋆ இமையோர்கள் தாதைக்கு⋆ இடம் என்பரால்⋆
சந்தினோடு மணியும் கொழிக்கும்⋆ புனல் காவிரி⋆
154 அந்தி போலும் நிறத்தார் வயல் சூழ்⋆ தென் அரங்கமே (1)

வையம் உண்டால் இலை மேவும் மாயன்⋆ மணி நீள் முடிப்⋆
பை கொள் நாகத்தணையான்⋆ பயிலும் இடம் என்பரால்⋆
தையல் நல்லார் குழல் மாலையும்⋆ மற்றவர் தட முலை⋆
155 செய்ய சாந்தும் கலந்திழி புனல் சூழ்⋆ தென் அரங்கமே (2)

பண்டிவ்வையம் அளப்பான் சென்று⋆ மாவலி கையில் நீர்
கொண்ட⋆ ஆழித் தடக் கைக்⋆ குறளன் இடம் என்பரால்⋆
வண்டு பாடும் மது வார் புனல்⋆ வந்திழி காவிரி⋆
156 அண்ட நாறும் பொழில் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (3)

விளைத்த வெம் போர் விறல் வாள் அரக்கன்⋆ நகர் பாழ் பட⋆
வளைத்த வல் வில் தடக்கை அவனுக்கு⋆ இடம் என்பரால்⋆
துளைக் கை யானை மருப்பும்⋆ அகிலும் கொணர்ந்துந்தி⋆ முன்
157 திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ்⋆ தென் அரங்கமே (4)

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன்⋆ வான் புக⋆
அம்பு தன்னால் முனிந்த⋆ அழகன் இடம் என்பரால்⋆
உம்பர் கோனும் உலகேழும்⋆ வந்தீண்டி வணங்கும்⋆ நல்
158 செம் பொனாரும் மதிள் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (5)

கலை உடுத்த அகலல்குல்⋆ வன் பேய் மகள் தாய் என⋆
முலை கொடுத்தாள் உயிர் உண்டவன்⋆ வாழும் இடம் என்பரால்⋆
குலையெடுத்த கதலிப்⋆ பொழிலூடும் வந்துந்தி⋆ முன்
159 அலை எடுக்கும் புனல் காவிரி சூழ்⋆ தென் அரங்கமே (6)

கஞ்சன் நெஞ்சும் கடு மல்லரும்⋆ சகடமும் காலினால்⋆
துஞ்ச வென்ற சுடர் ஆழியான்⋆ வாழிடம் என்பரால்⋆
மஞ்சு சேர் மாளிகை⋆ நீடகில் புகையும்⋆ மறையோர்
160 செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும்⋆ தென் அரங்கமே (7)

ஏன மீன் ஆமையோடு⋆ அரியும் சிறு குறளுமாய்⋆
தானுமாயத்⋆ தரணித் தலைவன் இடம் என்பரால்⋆
வானும் மண்ணும் நிறையப்⋆ புகுந்தீண்டி வணங்கும்⋆ நல்
161 தேனும் பாலும் கலந்தன்னவர் சேர்⋆ தென் அரங்கமே (8)

சேயன் என்றும் மிகப் பெரியன்⋆ நுண் நேர்மையின் ஆய⋆ இம்
மாயையையாரும் அறியா வகையான்⋆ இடம் என்பரால்⋆
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்து⋆ ஆர் புனல் காவிரி⋆
162 ஆய பொன் மா மதிள் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (9)

‡அல்லி மாதர் அமரும்⋆ திரு மார்வன் அரங்கத்தை⋆
கல்லின் மன்னு மதிள்⋆ மங்கையர் கோன் கலிகன்றி சொல்⋆
நல்லிசை மாலைகள்⋆ நால் இரண்டும் இரண்டும் உடன்⋆
163 வல்லவர் தாம் உலகாண்டு⋆ பின் வான் உலகாள்வரே (10)

## பெரிய திருமொழி (5-5) - வெருவாதாள்

‡வெருவாதாள் வாய்வெருவி⋆ வேங்கடமே!
வேங்கடமே! என்கின்றாளால்⋆
மருவாளாள் என் குடங்கால்⋆ வாள் நெடுங்கண்
துயில் மறந்தாள்⋆ வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர் தம் உயிராளன்⋆
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
164 எங்ஙனம் நான் சிந்திக்கேனே (1)

கலையாளா அகல் அல்குல்⋆ கனவளையும்
கையாளா என் செய்கேன் நான்⋆
விலையாளா அடியேனை⋆ வேண்டுதியோ
வேண்டாயோ என்னும்⋆ மெய்ய
மலையாளன் வானவர் தம் தலையாளன்⋆
மராமரம் ஏழெய்த வென்றிச்
சிலையாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
165 எங்ஙனம் நான் சிந்திக்கேனே (2)

மான் ஆய மென் நோக்கி⋆ வாள் நெடுங்கண்
நீர் மல்கும் வளையும் சோரும்⋆
தேன் ஆய நறுந் துழாய் அலங்கலின்
திறம் பேசி⋆ உறங்காள் காண்மின்⋆
கான் ஆயன் கடி மனையில் தயிர் உண்டு
நெய் பருக⋆ நந்தன் பெற்ற
ஆன் ஆயன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
166 அம்மனைமீர்! அறிகிலேனே (3)

தாய் வாயில் சொற் கேளாள்⋆ தன் ஆயத்-
தோடணையாள் தட மென் கொங்கையே⋆
ஆரச் சாந்தணியாள்⋆ எம் பெருமான்
திருவரங்கம் எங்கே என்னும்⋆
பேய்மாய முலையுண்டிவ்வுலகுண்ட⋆

www.prapatti.com

பெரு வயிற்றன் பேசில் நங்காய்⋆
மா மாயன் என் மகளைச் செய்தனகள்⋆
167 மங்கைமீர்! மதிக்கிலேனே (4)

பூண் முலைமேல் சாந்தணியாள்⋆ பொரு கயல் கண்
மை எழுதாள் பூவை பேணாள்⋆
ஏண் அறியாள் எத்தனையும்⋆ எம் பெருமாந்
திருவரங்கம் எங்கே என்னும்⋆
நாண்மலராள் நாயகனாய்⋆ நாம் அறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி⋆
ஆண்மகனாய் என் மகளைச் செய்தனகள்⋆
168 அம்மனைமீர்! அறிகிலேனே (5)

தாதாடு வனமாலை⋆ தாரானோ
என்றென்றே தளர்ந்தாள் காண்மின்⋆
யாதானும் ஒன்றுரைக்கில்⋆ எம் பெருமான்
திருவரங்கம் என்னும்⋆ பூமேல்
மாதாளன் குடம் ஆடி மதுசூதன்⋆
மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன்⋆ என்மகளைச் செய்தனகள்⋆
169 எங்ஙனம் நான் சொல்லுகேனே (6)

வார் ஆளும் இளங்கொங்கை⋆ வண்ணம்
வேறாயினவாறெண்ணாள்⋆ எண்ணில்
பேராளன் பேர் அல்லால் பேசாள்⋆ இப்
பெண் பெற்றேன் என் செய்கேன் நான்⋆
தாராளன் தண் குடந்தை நகர் ஆளன்⋆
ஐவர்க்காய் அமரில் உய்த்த
தேர் ஆளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
170 எங்ஙனம் நான் செப்புகேனே (7)

உறவாதும் இலள் என்றென்று⋆ ஒழியாது
பலர் ஏசும் அலர் ஆயிற்றால்⋆
மறவாதே எப்பொழுதும்⋆ மாயவனே!

www.prapatti.com

மாதவனே! என்கின்றாளால்⋆
பிறவாத பேராளன் பெண் ஆளன்
மண் ஆளன்⋆ விண்ணோர் தங்கள்
அறவாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
171 அம்மனைமீர்! அறிகிலேனே (8)

பந்தோடு கழல் மருவாள்⋆ பைங்கிளியும்
பால் ஊட்டாள் பாவை பேணாள்⋆
வந்தானோ திருவரங்கன்⋆ வாரானோ
என்றென்றே வளையும் சோரும்⋆
சந்தோகன் பௌழியன்⋆ ஐந் தழல் ஓம்பு
தைத்திரியன் சாமவேதி⋆
அந்தோ! வந்தென் மகளைச் செய்தனகள்⋆
172 அம்மனைமீர்! அறிகிலேனே (9)

‡சேல் உகளும் வயல் புடை சூழ்⋆ திருவரங்கத்-
தம்மானைச் சிந்தை செய்த⋆
நீல மலர்க் கண் மடவாள் நிறை அழிவைத்⋆
தாய் மொழிந்த அதனை⋆ நேரார்
கால வேல் பரகாலன்⋆ கலிகன்றி
ஒலி மாலை கற்று வல்லார்⋆
மாலை சேர் வெண் குடைக்கீழ் மன்னவராய்ப்⋆
173 பொன் உலகில் வாழ்வர் தாமே (10)

## பெரிய திருமொழி (5-6) - கைம்மானம்

‡கைம் மான மழ களிற்றைக்⋆ கடல் கிடந்த கருமணியை⋆
மைம் மான மரதகத்தை⋆ மறையுரைத்த திருமாலை⋆
எம்மானை எனக்கென்றும் இனியானைப்⋆ பனி காத்த
174 அம்மானை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (1)

‡பேரானைக்⋆ குறுங்குடி எம் பெருமானை⋆ திருத்தண்கால்
ஊரானைக்⋆ கரம்பனூர் உத்தமனை⋆ முத்திலங்கு

கார் ஆர் திண் கடல் ஏழும்⋆ மலையேழ் இவ்வுலகேழ் உண்டும்⋆
175 ஆராதென்றிருந்தானைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (2)

ஏன் ஆகி உலகிடந்து⋆ அன்றிரு நிலனும் பெரு விசும்பும்⋆
தான் ஆய பெருமானைத்⋆ தன் அடியார் மனத்தென்றும்⋆
தேன் ஆகி அமுதாகித் திகழ்ந்தானை⋆ மகிழ்ந்தொருகால்⋆
176 ஆன் ஆயன் ஆனானைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (3)

வளர்ந்தவனைத் தடங்கடலுள்⋆ வலி உருவில் திரி சகடம்⋆
தளர்ந்துதிர உதைத்தவனைத்⋆ தரியாதன்றிரணியனைப்
பிளந்தவனை⋆ பெரு நிலம் ஈர் அடி நீட்டிப்⋆ பண்டொருநாள்
177 அளந்தவனை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (4)

நீர் அழலாய் நெடு நிலனாய்⋆ நின்றானை⋆ அன்றரக்கன்
ஊர் அழலால் உண்டானைக்⋆ கண்டார் பின் காணாமே⋆
பேர் அழலாய்ப் பெரு விசும்பாய்ப்⋆ பின் மறையோர் மந்திரத்தின்⋆
178 ஆர் அழலால் உண்டானைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (5)

தஞ்சினத்தைத் தவிர்த்தடைந்தார்⋆ தவ நெறியை⋆ தரியாது
கஞ்சனைக் கொன்று⋆ அன்றுலகம் உண்டுமிழ்ந்த கற்பகத்தை⋆
வெஞ்சினத்த கொடுந் தொழிலோன்⋆ விசையுருவை அசைவித்த⋆
179 அஞ்சிறைப் புட் பாகனை⋆ யான் கண்டது தென் அரங்கத்தே (6)

‡சிந்தனையைத் தவநெறியைத்⋆ திருமாலை⋆ பிரியாது
வந்தெனது மனத்திருந்த⋆ வடமலையை⋆ வரி வண்டார்
கொந்தணைந்த பொழிற் கோவல்⋆ உலகளப்பான் அடி நிமிர்த்த
180 அந்தணனை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (7)

துவரித்த உடையவர்க்கும்⋆ தூய்மை இல்லாச் சமணர்க்கும்⋆
அவர்கட்கங்கருள் இல்லா⋆ அருளானை⋆ தன் அடைந்த
எமர்கட்கும் அடியேற்கும்⋆ எம்மாற்கும் எம் அனைக்கும்⋆
181 அமரர்க்கும் பிரானாரைக்⋆ கண்டது தென் அரங்கத்தே (8)

பொய் வண்ணம் மனத்தகற்றிப்⋆ புலன் ஐந்தும் செல வைத்து⋆
மெய் வண்ணம் நினைந்தவர்க்கு⋆ மெய்ந் நின்ற வித்தகனை⋆

மை வண்ணம் கரு முகில் போல்⋆ திகழ் வண்ண மரதகத்தின்⋆
182 அவ்வண்ண வண்ணனை⋆ யான் கண்டது தென் அரங்கத்தே (9)

‡ஆ மருவி நிரை மேய்த்த⋆ அணி அரங்கத்தம்மானை⋆
காமரு சீர்க் கலிகன்றி⋆ ஒலி செய்த மலி புகழ் சேர்⋆
நா மருவு தமிழ் மாலை⋆ நால் இரண்டோடிரண்டினையும்⋆
183 நாமருவி வல்லார் மேல்⋆ சாரா தீவினை தாமே (10)

## பெரிய திருமொழி (5-7) - பண்டை

‡பண்டை நான்மறையும் வேள்வியும்⋆ கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்⋆
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி அனலும்⋆
பெருகிய புனலொடு நிலனும்⋆
கொண்டல் மாருதமும் குரை கடல் ஏழும்⋆
ஏழு மா மலைகளும் விசும்பும்⋆
அண்டமும் தானாய் நின்ற எம் பெருமான்⋆
184 அரங்க மா நகர் அமர்ந்தானே (1)

இந்திரன் பிரமன் ஈசன் என்றிவர்கள்⋆
எண்ணில் பல் குணங்களே இயற்ற⋆
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
சுற்றமும்⋆ சுற்றி நின்றகலாப்
பந்தமும்⋆ பந்தம் அறுப்பதோர் மருந்தும்
பான்மையும்⋆ பல் உயிர்க்கெல்லாம்⋆
அந்தமும் வாழ்வுமாய எம் பெருமான்⋆
185 அரங்க மா நகர் அமர்ந்தானே (2)

மன்னு மா நிலனும் மலைகளும் கடலும்⋆
வானமும் தானவர் உலகும்⋆
துன்னு மா இருளாய்த் துலங்கொளி சுருங்கித்⋆
தொல்லை நான்மறைகளும் மறைய⋆
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப்⋆
பிறங்கிருள் நிறம் கெட⋆ ஒருநாள்



www.prapatti.com

அன்னமாய் அன்றங்கரு மறை பயந்தான்⋆
186 அரங்க மா நகர் அமர்ந்தானே (3)

மா இருங்குன்றம் ஒன்று மத்தாக⋆
மாசுணம் அதனொடும் அளவி⋆
பா இரும் பௌவம் பகடு விண்டலறப்⋆
படு திரை விசும்பிடைப் படர⋆
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்⋆
தேவரும் தாம் உடன் திசைப்ப⋆
ஆயிரம் தோளால் அலை கடல் கடைந்தான்⋆
187 அரங்க மா நகர் அமர்ந்தானே (4)

எங்ஙனே உய்வர் தானவர் நினைந்தால்⋆
இரணியன் இலங்கு பூண் அகலம்⋆
பொங்கு வெங்குருதி பொன் மலை பிளந்து⋆
பொழி தரும் அருவி ஒத்திழிய⋆
வெங்கண் வாள் எயிற்றோர் வெள்ளி மா விலங்கல்⋆
விண்ணுறக் கனல் விழித்தெழுந்தது⋆
அங்ஙனேயொக்க அரியுருவானான்⋆
188 அரங்க மா நகர் அமர்ந்தானே (5)

ஆயிரம் குன்றம் சென்று தொக்கனைய⋆
அடல் புரை எழில் திகழ் திரள் தோள்⋆
ஆயிரம் துணிய அடல் மழுப் பற்றி⋆
மற்றவன் அகல் விசும்பணைய⋆
ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச⋆
அறிதுயில் அலை கடல் நடுவே⋆
ஆயிரம் சுடர் வாய் அரவணைத் துயின்றான்⋆
189 அரங்க மா நகர் அமர்ந்தானே (6)

சுரி குழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த⋆
கொடுமையிற் கடு விசை அரக்கன்⋆
எரிவிழித்திலங்கு மணி முடி பொடி செய்து⋆
இலங்கை பாழ் படுப்பதற்கெண்ணி⋆



www.prapatti.com

வரி சிலை வளைய அடுசரம் துரந்து⋆
மறி கடல் நெறிபட⋆ மலையால்
அரிகுலம் பணி கொண்டலை கடல் அடைத்தான்⋆
190 அரங்க மா நகர் அமர்ந்தானே (7)

ஊழியாய் ஓமத்துச்சியாய்⋆ ஒருகால்
உடைய தேர் ஒருவனாய்⋆ உலகில்
சூழி மால் யானைத் துயர் கெடுத்து⋆ இலங்கை
மலங்க அன்றடு சரம் துரந்து⋆
பாழியால் மிக்க பார்த்தனுக்கருளிப்⋆
பகலவன் ஒளி கெட⋆ பகலே
ஆழியால் அன்றங்காழியை மறைத்தான்⋆
191 அரங்க மா நகர் அமர்ந்தானே (8)

பேயினார் முலை ஊண் பிள்ளையாய்⋆ ஒருகால்
பெரு நிலம் விழுங்கி⋆ அது மிழ்ந்த
வாயனாய் மாலாய் ஆல் இலை வளர்ந்து⋆
மணி முடி வானவர் தமக்குச்
சேயனாய்⋆ அடியேற்கணியனாய் வந்து⋆ என்
சிந்தையுள் வெந்துயரறுக்கும்⋆
ஆயனாய் அன்று குன்றம் ஒன்றெடுத்தான்⋆
192 அரங்க மா நகர் அமர்ந்தானே (9)

‡பொன்னும் மா மணியும் முத்தமும் சுமந்த⋆
பொரு திரை மா நதி புடை சூழ்ந்து⋆
அன்னம் ஆடுலவும் அலை புனல் சூழ்ந்த⋆
அரங்க மா நகர் அமர்ந்தானை⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன்⋆
மான வேற் கலியன் வாய் ஒலிகள்⋆
பன்னிய பனுவல் பாடுவார்⋆ நாளும்
193 பழவினை பற்றறுப்பாரே (10)

www.prapatti.com

## பெரிய திருமொழி (5-8) - ஏழை ஏதலன்

‡ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா-
திரங்கி⋆ மற்றவற்கின்னருள் சுரந்து⋆
மாழை மான் மட நோக்கி உன் தோழி⋆
உம்பி எம்பி என்றொழிந்திலை⋆ உகந்து
தோழன் நீ எனக்கிங்கொழி என்ற⋆
சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட⋆
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன்⋆
194 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (1)

வாத மா மகன் மர்க்கடம் விலங்கு⋆
மற்றோர் சாதியென்றொழிந்திலை⋆ உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்⋆
செய் தகவினுக்கில்லை கைம்மாறென்று⋆
கோதில் வாய்மையினாயொடும்⋆ உடனே
உண்பன் நான் என்ற ஒண் பொருள்⋆ எனக்கும்
ஆதல் வேண்டும் என்றடியிணையடைந்தேன்⋆
195 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (2)

கடி கொள் பூம் பொழில் காமரு பொய்கை⋆
வைகு தாமரை வாங்கிய வேழம்⋆
முடியும் வண்ணம் ஓர் முழு வலி முதலை
பற்ற⋆ மற்றது நின் சரண் நினைப்ப⋆
கொடிய வாய் விலங்கின் உயிர் மலங்கக்⋆
கொண்ட சீற்றம் ஒன்றுண்டுளதறிந்து⋆ உன்
அடியனேனும் வந்தடியிணையடைந்தேன்⋆
196 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (3)

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம்⋆
வெருவி வந்து நின் சரண் எனச் சரணாய்⋆
நெஞ்சில் கொண்டு நின்னஞ்சிறைப் பறவைக்கு⋆
அடைக்கலம் கொடுத்தருள் செய்ததறிந்து⋆
வெஞ்சொலாளர்கள் நமன் தமர் கடியர்⋆



www.prapatti.com

கொடிய செய்வனவுள⋆ அதற்கடியேன்
அஞ்சிவந்து நின் அடியிணை அடைந்தேன்⋆
197 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (4)

மாக மா நிலம் முழுதும் வந்திறைஞ்சும்⋆
மலர் அடி கண்ட மா மறையாளன்⋆
தோகை மா மயில் அன்னவர் இன்பம்⋆
துற்றிலாமையில் அத்த! இங்கொழிந்து⋆
போகம் நீ எய்திப் பின்னும் நம் இடைக்கே⋆
போதுவாய் என்ற பொன் அருள்⋆ எனக்கும்
ஆக வேண்டும் என்றடியிணையடைந்தேன்⋆
198 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (5)

மன்னு நான்மறை மா முனி பெற்ற
மைந்தனை⋆ மதியாத வெங்கூற்றம்
தன்னை அஞ்சி⋆ நின் சரண் எனச் சரணாய்த்⋆
தகவில் காலனை உக முனிந்தொழியா⋆
பின்னை என்றும் நின் திருவடி பிரியா
வண்ணம்⋆ எண்ணிய பேரருள்⋆ எனக்கும்
அன்னதாகும் என்றடியிணையடைந்தேன்⋆
199 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (6)

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்⋆
உனக்குமுன் தந்த அந்தணன் ஒருவன்⋆
காதல் என் மகன் புகல் இடம் காணேன்⋆
கண்டு நீ தருவாய் எனக்கென்று⋆
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய⋆
குறை முடித்தவன் சிறுவனைக் கொடுத்தாய்⋆
ஆதலால் வந்துன் அடியிணை அடைந்தேன்⋆
200 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (7)

வேத வாய் மொழி அந்தணன் ஒருவன்⋆
எந்தை! நின் சரண் என்னுடை மனைவி⋆
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்⋆

www.prapatti.com

கடியதோர் தெய்வம் கொண்டொளிக்கும் என்றழைப்ப⋆
ஏதலார் முன்னே இன் அருள் அவர்க்குச்
செய்து⋆ உன் மக்கள் மற்றிவர் என்று கொடுத்தாய்⋆
ஆதலால் வந்துன் அடியிணை அடைந்தேன்⋆
201 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (8)

‡துளங்கு நீண் முடி அரசர் தம் குரிசில்⋆
தொண்டை மன்னவன் திண் திறல் ஒருவற்கு⋆
உளங்கொள் அன்பினோடின்னருள் சுரந்து⋆ அங்-
கோடு நாழிகை ஏழ் உடன் இருப்ப⋆
வளம் கொள் மந்திரம் மற்றவற்கருளிச்
செய்தவாறு⋆ அடியேன் அறிந்து⋆ உலகம்
அளந்த பொன் அடியே அடைந்துய்ந்தேன்⋆
202 அணி பொழில் திருவரங்கத்தம்மானே (9)

‡மாட மாளிகை சூழ் திருமங்கை
மன்னன்⋆ ஒன்னலர் தங்களை வெல்லும்⋆
ஆடல்மா வலவன் கலிகன்றி⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானை⋆
நீடு தொல் புகழ் ஆழி வல்லானை⋆
எந்தையை நெடுமாலை நினைந்த⋆
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
203 பாட⋆ நும்மிடைப் பாவம் நில்லாவே (10)

## பெரிய திருமொழி (6-6) - அம்பரமும்

தார் ஆளன் தண் அரங்கவாளன்⋆ பூமேல்
தனியாளன் முனியாளர் ஏத்த நின்ற
பேர் ஆளன்⋆ ஆயிரம் பேர் உடையவாளன்⋆
பின்னைக்கு மணவாளன் பெருமை கேட்பீர்⋆
பார் ஆளர் இவர் இவர் என்றழுந்தையேற்ற⋆
படை மன்னர் உடல் துணியப் பரிமாவுய்த்த⋆
தேர் ஆளன் கோச் சோழன் சேர்ந்த கோயில்⋆
204 திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (9)



www.prapatti.com

## பெரிய திருமொழி (7-3) - சினவில்

உரங்களால் இயன்ற மன்னர் மாளப்⋆
பாரதத்தொரு தேர் ஐவர்க்காய்ச் சென்று⋆
இரங்கி ஊர்ந்தவர்க்கின்னருள் செய்யும்
எம்பிரானை⋆ வம்பார் புனல் காவிரி⋆
அரங்கம் ஆளி என்னாளி விண்ணாளி⋆
ஆழி சூழ் இலங்கை மலங்கச் சென்று⋆
சரங்கள் ஆண்ட தண் தாமரைக் கண்ணனுக்-
205 கன்றி⋆ என் மனம் தாழ்ந்து நில்லாதே (4)

## பெரிய திருமொழி (8-2) - தெள்ளியீர்

‡தரங்க நீர் பேசினும்⋆ தண் மதி காயினும்⋆
இரங்குமோ⋆ எத்தனை நாள் இருந்தெள்கினாள்⋆
துரங்கம் வாய் கீண்டுகந்தான் அது⋆ தொன்மை ஊர்⋆
206 அரங்கமே என்பது⋆ இவள் தனக்காசையே (7)

## பெரிய திருமொழி (9-9) - மூவரில்

‡புனை வளர் பூம் பொழிலார்⋆ பொன்னி சூழ் அரங்க நகருள்
முனைவனை⋆ மூவுலகும் படைத்த⋆ முதல் மூர்த்தி தன்னை⋆
சினை வளர் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்றான்⋆
207 கனை கழல் காணுங்கொலோ⋆ கயற் கண்ணி எம் காரிகையே (2)

## பெரிய திருமொழி (11-3) - மன்னிலங்கு

கண்ணன் மனத்துள்ளே⋆ நிற்கவும்⋆ கைவளைகள்
என்னோ கழன்ற⋆ இவையென்ன மாயங்கள்⋆
பெண்ணானோம்⋆ பெண்மையோம் நிற்க⋆ அவன் மேய
208 அண்ணல் மலையும்⋆ அரங்கமும் பாடோமே (7)

www.prapatti.com

## பெரிய திருமொழி (11-8) - மாற்றமுள

‡அணியார் பொழில் சூழ்⋆ அரங்க நகர் அப்பா⋆
துணியேன் இனி⋆ நின் அருள் அல்லதெனக்கு⋆
மணியே! மணி மாணிக்கமே!⋆ மதுசூதா⋆
209 பணியாய் எனக்குய்யும் வகை⋆ பரஞ்சோதீ! (8)

## திருமங்கையாழ்வார் - திருக்குறுந்தாண்டகம்

இம்மையை மறுமை தன்னை⋆ எமக்கு வீடாகி நின்ற⋆
மெய்ம்மையை விரிந்த சோலை⋆ வியன் திருவரங்கம் மேய⋆
செம்மையைக் கருமை தன்னைத்⋆ திருமலை ஒருமையானை⋆
210 தன்மையை நினைவார் என்தன்⋆ தலைமிசை மன்னுவாரே (7)

ஆவியை அரங்க மாலை⋆ அழுக் குடம்பெச்சில் வாயால்⋆
தூய்மை இல் தொண்டனேன் நான்⋆ சொல்லினேன் தொல்லை நாமம்⋆
பாவியேன் பிழைத்தவாறென்று⋆ அஞ்சினேற்கஞ்சல் என்று⋆
211 காவி போல் வண்ணர் வந்து⋆ என் கண்ணுளே தோன்றினாரே (12)

இரும்பனன்றுண்ட நீரும்⋆ போதரும் கொள்க⋆ என்தன்
அரும்பிணி பாவம் எல்லாம்⋆ அகன்றன என்னை விட்டு⋆
சுரும்பமர் சோலை சூழ்ந்த⋆ அரங்க மா கோயில் கொண்ட⋆
212 கரும்பினைக் கண்டு கொண்டு⋆ என் கண் இணை களிக்குமாறே (13)

‡பிண்டியார் மண்டை ஏந்திப்⋆ பிறர் மனை திரிதந்துண்ணும்
உண்டியான்⋆ சாபம் தீர்த்த ஒருவன் ஊர்⋆ உலக மேத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்⋆ கச்சி பேர் மல்லை என்று
213 மண்டினார்⋆ உய்யல் அல்லால்⋆ மற்றை ஆர்க்குய்யல் ஆமே (19)

## திருமங்கையாழ்வார் - திருநெடுந்தாண்டகம்

பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவை பேணாள்⋆
பனி நெடுங்கண் நீர் ததும்பப் பள்ளி கொள்ளாள்⋆



www.prapatti.com

எள் துணைப் போதென் குடங்கால் இருக்ககில்லாள்⋆
    எம் பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்⋆
மட்டு விக்கி மணி வண்டு முரலும் கூந்தல்⋆
    மட மானை இது செய்தார் தம்மை⋆ மெய்யே
கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள் நங்காய்!⋆
214    கடல் வண்ணர் இதுசெய்தார் காப்பார் ஆரே (11)

நெஞ்சுருகிக் கண் பனிப்ப நிற்கும் சோரும்⋆
    நெடிதுயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள்⋆
நஞ்சரவில் துயில் அமர்ந்த நம்பீ! என்னும்⋆
    வம்பார் பூம் வயல் ஆலி மைந்தா என்னும்⋆
அஞ்சிறைய புட்கொடியே ஆடும் பாடும்⋆
    அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ என்னும்⋆
என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன்⋆
215    இரு நிலத்தோர் பழி படைத்தேன் ஏ பாவம்மே! (12)

‡முளைக் கதிரைக் குறுங்குடியுள் முகிலை⋆ மூவா
    மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற⋆
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
    அந்தணனை⋆ அந்தணர் தம் சிந்தை யானை⋆
விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்⋆
    வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு⋆
வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக! என்று⋆
216    மடக் கிளியைக் கை கூப்பி வணங்கினாளே (14)

கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்⋆
    கைத்தலமும் அடி இணையும் கமல வண்ணம்⋆
பார் வண்ண மட மங்கை பத்தர்⋆ பித்தர்
    பனி மலர் மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்⋆
ஏர் வண்ண என் பேதை என்சொல் கேளாள்⋆
    எம் பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்⋆
நீர் வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்⋆
217    இதுவன்றோ நிறை அழிந்தார் நிற்குமாறே (18)

www.prapatti.com

முற்றாரா வன முலையாள் பாவை⋆ மாயன்
மொய் அகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும்
அற்றாள்⋆ தன் நிறை அழிந்தாள் ஆவிக்கின்றாள்⋆
அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ! என்னும்⋆
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள்⋆
பேர் பாடித் தண் குடந்தை நகரும் பாடி⋆
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள்⋆
218 பொருவற்றாள் என் மகள் உம் பொன்னும் அஃதே (19)

நைவளம் ஒன்றாராயா நம்மை நோக்கா⋆
நாணினார் போல் இறையே நயங்கள் பின்னும்⋆
செய்வளவில் என் மனமும் கண்ணும் ஓடி⋆
எம் பெருமான் திருவடிக்கீழ் அணைய⋆ இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன்⋆ கண்டேன்
கன மகரக் குழை இரண்டும் நான்கு தோளும்⋆
எவ்வளவுண்டெம் பெருமான் கோயில் என்றேற்கு⋆
219 இதுவன்றோ எழில் ஆலி என்றார் தாமே (22)

உள்ளூரும் சிந்தை நோய் எனக்கே தந்து⋆ என்
ஒளி வளையும் மா நிறமும் கொண்டார் இங்கே⋆
தெள்ளூரும் இளந் தெங்கின் தேறல் மாந்திச்⋆
சேல் உகளும் திருவரங்கம் நம் ஊர் என்ற⋆
கள்ளூரும் பைந் துழாய் மாலை யானைக்⋆
கனவிடத்தில் யான் காண்பன் கண்ட போது⋆
புள்ளூரும் கள்வா நீ போகேல் என்பன்⋆
220 என்றாலும் இது நமக்கோர் புலவி தானே (23)

இரு கையில் சங்கிவை நில்லா எல்லே பாவம்!⋆
இலங்கொலி நீர் பெரும் பெளவம் மண்டி உண்ட⋆
பெரு வயிற்ற கரு முகிலே ஒப்பர் வண்ணம்⋆
பெருந் தவத்தர் அருந் தவத்து முனிவர் சூழ⋆
ஒரு கையில் சங்கொரு கை மற்றாழி ஏந்தி⋆
உலகுண்ட பெரு வாயர் இங்கே வந்து⋆ என்



www.prapatti.com

பொரு கயற் கண் நீர் அரும்பப் புலவி தந்து⋆
221 புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே! (24)

மின் இலங்கு திருவுருவும் பெரிய தோளும்⋆
கரி முனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்⋆
தன் அலர்ந்த நறுந் துழாய் மலரின் கீழே⋆
தாழ்ந்திலங்கும் மகரம் சேர் குழையும் காட்டி⋆
என் நலனும் என் நிறையும் என் சிந்தையும்⋆
என் வளையும் கொண்டென்னை ஆளும் கொண்டு⋆
பொன் அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே⋆
222 புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே! (25)

## திருவாய்மொழி (7-2) - கங்குலும் பகலும்

‡கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்⋆
கண்ண நீர் கைகளால் இறைக்கும்⋆
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும்⋆
தாமரைக் கண் என்றே தளரும்⋆
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டென்னும்⋆
இரு நிலம் கை துழாவிருக்கும்⋆
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்!⋆
223 இவள் திறத்தென் செய்கின்றாயே (1)

என் செய்கின்றாய் என் தாமரைக் கண்ணா!
என்னும்⋆ கண்ணீர் மல்க இருக்கும்⋆
என் செய்கேன் எறி நீர்த் திருவரங்கத்தாய்
என்னும்⋆ வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்⋆
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும்⋆
முகில்வண்ணா! தகுவதோ என்னும்⋆
முன் செய்திவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய்!⋆
224 எங்கொலோ முடிகின்றதிவட்கே (2)

வட்கிலள் இறையும் மணிவண்ணா! என்னும்⋆
வானமே நோக்கும் மையாக்கும்⋆


www.prapatti.com

உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட⋆
ஒருவனே! என்னும் உள்ளுருகும்⋆
கட்கிலீ! உன்னைக் காணுமாறருளாய்⋆
காகுத்தா! கண்ணனே! என்னும்⋆
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்!⋆
225 இவள்திறத்தென் செய்திட்டாயே (3)

இட்ட கால் இட்ட கைகளாய் இருக்கும்⋆
எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும்⋆
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும்⋆
கடல்வண்ணா! கடியை காண் என்னும்⋆
வட்ட வாய் நேமி வலங்கையா! என்னும்⋆
வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
சிட்டனே! செழு நீர்த் திருவரங்கத்தாய்!⋆
226 இவள்திறத்தென் சிந்தித்தாயே (4)

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும்⋆
திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும்⋆ ஆங்கே மழைக்கண்ணீர் மல்க⋆
வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
அந்திப்போதவுணன் உடல் இடந்தானே!⋆
அலை கடல் கடைந்த ஆரமுதே⋆
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த⋆
227 தையலை மையல் செய்தானே! (5)

மையல் செய்தென்னை மனம் கவர்ந்தானே!
என்னும்⋆ மா மாயனே! என்னும்⋆
செய்ய வாய் மணியே! என்னும்⋆ தண் புனல் சூழ்
திருவரங்கத்துள்ளாய்! என்னும்⋆
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில்
ஏந்தும்⋆ விண்ணோர் முதல்! என்னும்⋆
பை கொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய்⋆
228 பாவியேன் செயற்பாலதுவே (6)



www.prapatti.com

பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்!⋆
    பற்றிலார் பற்ற நின்றானே⋆
கால சக்கரத்தாய்! கடல் இடம் கொண்ட⋆
    கடல்வண்ணா! கண்ணனே! என்னும்⋆
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய்!
    என்னும்⋆ என் தீர்த்தனே! என்னும்⋆
கோல மா மழைக்கண் பனி மல்க இருக்கும்⋆
229    என்னுடைக் கோமளக் கொழுந்தே (7)

கொழுந்து வானவர்கட்கென்னும்⋆
    குன்றேந்திக்கோ நிரை காத்தவன்! என்னும்⋆
அழும் தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும்⋆
    அஞ்சன வண்ணனே! என்னும்⋆
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும்⋆
    எங்ஙனே நோக்குகேன் என்னும்⋆
செழுந் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்!⋆
230    என் செய்கேன் என் திருமகட்கே (8)

‡என் திருமகள் சேர் மார்பனே! என்னும்⋆
    என்னுடை ஆவியே! என்னும்⋆
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட⋆
    நிலமகள் கேள்வனே! என்னும்⋆
அன்றுருவேழும் தழுவி நீ கொண்ட⋆
    ஆய்மகள் அன்பனே! என்னும்⋆
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே!⋆
231    தெளிகிலேன் முடிவிவள் தனக்கே (9)

முடிவிவள் தனக்கொன்றறிகிலேன் என்னும்⋆
    மூவுலகாளியே! என்னும்⋆
கடி கமழ் கொன்றைச் சடையனே! என்னும்⋆
    நான்முகக் கடவுளே! என்னும்⋆
வடிவுடை வானோர் தலைவனே! என்னும்⋆
    வண் திருவரங்கனே! என்னும்⋆



www.prapatti.com

அடியடையாதாள் போலிவள் அணுகி
232 அடைந்தனள்⋆ முகில்வண்ணன் அடியே (10)

‡முகில்வண்ணன் அடியை அடைந்தருள் சூடி
உய்ந்தவன்⋆ மொய் புனல் பொருநல்⋆
துகில் வண்ணத் தூ நீர்ச் சேர்ப்பன்⋆
வண் பொழில் சூழ் வண் குருகூர்ச் சடகோபன்⋆
முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை⋆
ஆயிரத்திப் பத்தும் வல்லார்⋆
முகில் வண்ண வானத்திமையவர் சூழ
233 இருப்பர்⋆ பேரின்ப வெள்ளத்தே (11)

## பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி

ஒன்றும் மறந்தறியேன்⋆ ஓத நீர் வண்ணனை நான்⋆
இன்று மறப்பனோ ஏழைகாள்⋆ அன்று
கருவரங்கத்துள் கிடந்து⋆ கை தொழுதேன் கண்டேன்⋆
234 திருவரங்க மேயான் திசை (6)

## பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி

மனத்துள்ளான் வேங்கடத்தான்⋆ மா கடலான்⋆ மற்றும்
நினைப்பரிய⋆ நீள் அரங்கத்துள்ளான்⋆ எனைப் பலரும்
தேவாதி தேவன்⋆ எனப்படுவான்⋆ முன் ஒரு நாள்
235 மா வாய் பிளந்த மகன் (28)

பயின்றதரங்கம் திருக்கோட்டி⋆ பன்னாள்
பயின்றதுவும்⋆ வேங்கடமே பன்னாள்⋆ பயின்ற-
தணி திகழும் சோலை⋆ அணி நீர் மலையே⋆
236 மணி திகழும் வண் தடக்கை மால் (46)

தமர் உள்ளம் தஞ்சை⋆ தலை அரங்கம் தண் கால்⋆
தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை⋆ தமர் உள்ளும்


www.prapatti.com

மாமல்லை கோவல்⋆ மதிட்குடந்தை என்பரே⋆
237 ஏவல்ல எந்தைக் கிடம் (70)

திறம்பிற்றினி அறிந்தேன்⋆ தென் அரங்கத்தெந்தை⋆
திறம்பா வழி சென்றார்க்கல்லால்⋆ திறம்பாச்
செடிநரகை நீக்கித்⋆ தாம் செல்வதன் முன்⋆ வானோர்
238 கடிநகர வாசல் கதவு (88)

## பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி

‡பண்டெல்லாம் வேங்கடம்⋆ பாற்கடல் வைகுந்தம்⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல்⋆ வண்டு
வளம் கிளரும் நீள் சோலை⋆ வண் பூங்கடிகை⋆
239 இளங்குமரன் தன் விண்ணகர் (61)

விண்ணகரம் வெஃகா⋆ விரி திரை நீர் வேங்கடம்⋆
மண் நகரம் மா மாட வேளுக்கை⋆ மண்ணகத்த
தென் குடந்தை⋆ தேன் ஆர் திருவரங்கம் தென்கோட்டி⋆
240 தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு (62)

## திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி

பாலில் கிடந்ததுவும்⋆ பண்டரங்கம் மேயதுவும்⋆
ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார்⋆ ஞாலத்-
தொரு பொருளை⋆ வானவர் தம் மெய்ப் பொருளை⋆ அப்பில்
241 அரு பொருளை⋆ யான் அறிந்த வாறு (3)

அவன் என்னை ஆளி⋆ அரங்கத்தரங்கில்⋆
அவன் என்னை எய்தாமல் காப்பான்⋆ அவன் என்ன-
துள்ளத்து⋆ நின்றான் இருந்தான் கிடக்குமே⋆
242 வெள்ளத்தரவணையின் மேல் (30)

‡நாகத்தணைக் குடந்தை⋆ வெஃகா திருவெவ்வுள்⋆
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில்⋆ நாகத்-

தணைப் பாற்கடல் கிடக்கும்⋆ ஆதி நெடுமால்⋆
243 அணைப்பார் கருத்தன் ஆவான் (36)

ஆள் பார்த்துழிதருவாய்⋆ கண்டுகொள் என்று⋆ நின்
தாட் பார்த்துழிதருவேன் தன்மையை⋆ கேட்பார்க்-
கரும் பொருளாய் நின்ற⋆ அரங்கனே⋆ உன்னை
244 விரும்புவதே விள்ளேன் மனம் (60)

நம்மாழ்வார் - திருவிருத்தம்

தண்ணந் துழாய்⋆ வளை கொள்வது யாம் இழப்போம்⋆ நடுவே
வண்ணம் துழாவி⋆ ஓர் வாடை உலாவும்⋆ வள் வாய் அலகால்
புள் நந்துழாமே பொரு நீர்த் திருவரங்கா! அருளாய்⋆
245 எண்ணந் துழாவுமிடத்து⋆ உளவோ பண்டும் இன்னன்னவே (28)

திருமங்கையாழ்வார் - சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே⋆ நான் அவனைக்
காரார் திருமேனி காணும் அளவும் போய்⋆
‡சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்⋆
246 ‡ஆராமம் சூழ்ந்த அரங்கம் (36)

திருமங்கையாழ்வார் - பெரிய திருமடல்

மாமலர்மேல்
அன்னம் துயிலும் அணி நீர் வயலாலி⋆
என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெரு மலையை⋆
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை⋆
மின்னை இருசுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்

பொன்னை⋆ மரதகத்தைப் புட்குழி எம் போரேற்றை⋆
247 மன்னும் அரங்கத்தெம் மாமணியை (63)

## திருவரங்கத்தமுதனார் - இராமானுச நூற்றந்தாதி

‡கள்ளார் பொழில் தென் அரங்கன்⋆ கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா⋆ மனிசரை நீங்கி⋆ குறையற்பிரான் அடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன்⋆ மிக்க சீலம் அல்லால்
248 உள்ளாதென் நெஞ்சு⋆ ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே (2)

செய்யும் பசுந் துளபத் தொழில் மாலையும்⋆ செந்தமிழில்
பெய்யும்⋆ மறைத் தமிழ் மாலையும்⋆ பேராத சீர் அரங்கத்-
தையன் கழற்கணியும் பரன் தாள் அன்றி⋆ ஆதரியா
249 மெய்யன்⋆ இராமானுசன் சரணே கதி வேறெனக்கே (13)

‡தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து⋆ தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து⋆ அளித்தவன் காண்மின்⋆ அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல் அருளால்⋆
250 வாழ்கின்ற வள்ளல்⋆ இராமானுசன் என்னும் மா முனியே (16)

நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே⋆ சில மானிடத்தைப்
புயலே எனக்⋆ கவி போற்றி செய்யேன்⋆ பொன் அரங்கம் என்னில்
மயலே பெருகும் இராமானுசன்⋆ மன்னு மா மலர்த்தாள்
251 அயரேன்⋆ அருவினை என்னை எவ்வாறின்றடர்ப்பதுவே (35)

ஆயிழையார் கொங்கை தங்கும்⋆ அக் காதல் அளற்றழுந்தி
மாயும் என் ஆவியை⋆ வந்தெடுத்தான் இன்று⋆ மா மலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன்⋆ அரங்கன் என்னும்
252 தூயவன்⋆ தீதில் இராமானுசன் தொல் அருள் சுரந்தே (42)

இறைஞ்சப் படும் பரன் ஈசன் அரங்கன் என்று⋆ இவ்வுலகத்
தறம் செப்பும்⋆ அண்ணல் இராமானுசன்⋆ என் அருவினையின்
திறம் செற்றிரவும் பகலும் விடாதென்தன் சிந்தையுள்ளே⋆
253 நிறைந்தொப்பற இருந்தான்⋆ எனக்காரும் நிகர் இல்லையே! (47)

ஆனது செம்மை அறநெறி⋆ பொய்ம்மை அறு சமயம்
போனது பொன்றி⋆ இறந்தது வெங்கலி⋆ பூங்கமலத்
தேன் நதி பாய் வயல் தென் அரங்கன் கழல் சென்னி வைத்துத்⋆
254 தான் அதில் மன்னும்⋆ இராமானுசன் இத்தலத்துதித்தே (49)

பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப⋆ இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ் கொண்டு⋆ புன்மையினேனிடைத் தான் புகுந்து⋆
தீர்த்தான் இரு வினை தீர்த்து⋆ அரங்கன் செய்ய தாள் இணையோ-
255 டார்த்தான்⋆ இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே (52)

கண்டவர் சிந்தை கவரும்⋆ கடி பொழில் தென் அரங்கன்⋆
தொண்டர் குலாவும் இராமானுசனை⋆ தொகை இறந்த
பண் தரு வேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்⋆
256 கொண்டலை மேவித் தொழும்⋆ குடியாம் எங்கள் கோக்குடியே (55)

மற்றொரு பேறு மதியாது⋆ அரங்கன் மலர் அடிக்காள்
உற்றவரே⋆ தனக்குற்றவராக் கொள்ளும் உத்தமனை⋆
நற்றவர் போற்றும் இராமானுசனை⋆ இந் நானிலத்தே
257 பெற்றனன்⋆ பெற்ற பின் மற்றறியேன் ஒரு பேதைமையே (57)

சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து⋆ முன்னாள்
அந்தம் உற்றாழ்ந்தது கண்டு⋆ அவை என் தனக்கன்றருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன்⋆ தான் அது தந்து⋆
258 எந்தை இராமானுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே (69)

செய்த்தலைச் சங்கம் செழு முத்தம் ஈனும்⋆ திருவரங்கர்
கைத்தலத்தாழியும்⋆ சங்கமும் ஏந்தி⋆ நங்கண் முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேன் என்றிருக்கிலும் நின் புகழே⋆
மொய்த்தலைக்கும் வந்து⋆ இராமானுச! என்னை முற்றும்
259 நின்றே (75)

சோர்வின்றி உன்தன் துணை அடிக்கீழ்⋆ தொண்டு பட்டவர்பால்⋆
சார்வின்றி நின்ற எனக்கு⋆ அரங்கன் செய்ய தாள் இணைகள்

www.prapatti.com

பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச!⋆ இனி உன்
260 சீர் ஒன்றிய கருணைக்கு⋆ இல்லை மாறு தெரிவுறிலே (81)

மருள் சுரந்தாகம வாதியர் கூறும்⋆ அவப் பொருளாம்
இருள் சுரந்தெய்த்த⋆ உலகிருள் நீங்கத்⋆ தன் ஈண்டிய சீர்
அருள் சுரந்தெல்லா உயிர்கட்கும் நாதன்⋆ அரங்கன் என்னும்
261 பொருள் சுரந்தான்⋆ எம் இராமானுசன் மிக்க புண்ணியனே (91)

‡அங்கயல் பாய் வயல் தென் அரங்கன்⋆ அணி ஆகமன்னும்
பங்கய மாமலர்⋆ பாவையைப் போற்றுதும்⋆ பத்தி எல்லாம்
தங்கியதென்னத் தழைத்து நெஞ்சே! நம் தலைமிசையே⋆
262 பொங்கிய கீர்த்தி⋆ இராமானுசன் அடிப் பூ மன்னவே (108)

## தேசிக பிரபந்தம் - அதிகாரசங்கிரகம்

‡ஆராத அருள் அமுதம் பொதிந்த கோயில்⋆
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்களித்த கோயில்⋆
தோலாத தனி வீரன் தொழுத கோயில்⋆
துணையான வீடணற்குத் துணையாம் கோயில்⋆
சேராத பயன் எல்லாம் சேர்க்கும் கோயில்⋆
செழு மறையின் முதல் எழுத்துச் சேர்ந்த கோயில்⋆
தீராத வினை அனைத்தும் தீர்க்கும் கோயில்⋆
263 திருவரங்கம் எனத் திகழும் கோயில் தானே (42)

‡உறு சகடமுடையவொரு காலுற்றுணர்ந்தன⋆
உடன் மருதமொடியவொரு போதில் தவழ்ந்தன⋆
உறி தடவுமளவிலுரலோடுற்று நின்றன⋆
உறுநெறியோர் தருமன் விடு தூதுக்குகந்தன⋆
மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன⋆
மலர்மகள் கை வருட மலர் போதில் சிவந்தன⋆
மறுபிறவி அறுமுனிவர் மாலுக்கிசைந்தன⋆
மனு முறையில் வருவதோர் விமானத்துறைந்தன⋆
அறமுடைய விசயனமர் தேரில் திகழ்ந்தன⋆
அடலுரக படமடிய ஆடிக் கடிந்தன⋆

அறு சமயமறிவரிய தானத்தமர்ந்தன⋆
அணி குருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன⋆
வெறியுடைய துளவமலர் வீறுக்கணிந்தன⋆
விழு கரியோர் குமரன் என மேவிச் சிறந்தன⋆
விறலசுரர் படையடைய வீயத் துரந்தன⋆
264 விடலரிய பெரிய பெருமாள் மென் பதங்களே (51)

## தேசிக பிரபந்தம் - அமிருதரஞ்சனி

செம் பொன் கழல் இணைச்⋆ செய்யாள் அமரும் திருவரங்கர்⋆
அன்பர்க்கடியவராய்⋆ அடி சூடிய நாம் உரைத்தோம்⋆
இன்பத் தொகை என எண்ணிய⋆ மூன்றில் எழுத்தடைவே⋆
265 ஐம்பத்தொரு பொருள்⋆ ஆர் உயிர் காக்கும் அமுதெனவே (13)

## தேசிக பிரபந்தம் - அமிருதாசுவாதினி

என்னது யான் செய்கின்றேன் என்னாதாருக்கு⋆
இன் அடிமை தந்தளிப்பான் இமையோர் வாழும்⋆
பொன் உலகில் திருவுடனே அமர்ந்த நாதன்⋆
புனல் ஆரும் பொழில் அரங்கம் திகழ மன்னித்⋆
தன் அகலம் அகலாத தகவால் ஓங்கும்⋆
தகவுடனே தன் கருமம் தானே எண்ணி⋆
அன்னை என அடைக்கலம் கொண்டஞ்சல் தந்து⋆ என்
266 அழலாற நிழலார அளிக்கின்றானே (9)

‡ஆதி மறை என ஓங்கும் அரங்கத்துள்ளே⋆
அருள் ஆரும் கடலைக் கண்டவன் நம் பாணன்⋆
ஓதியதோர் இரு நான்கும் இரண்டுமான⋆
ஒரு பத்தும் பற்றாக உணர்ந்துரைத்தோம்⋆
நீதி அறியாத நிலை அறிவார்க்கெல்லாம்⋆
நிலை இதுவே என்று நிலை நாடி நின்றோம்⋆
வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம்⋆
267 விதையாகும் இது என்று விளம்பினோமே (36)

www.prapatti.com

‡காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றின்றிக்⋆
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்⋆
பாண் பெருமாள் அருள் செய்த பாடல் பத்தும்⋆
பழ மறையின் பொருள் என்று பரவுகின்றோம்⋆
வேண் பெரிய விரி திரை நீர் வையத்துள்ளே⋆
வேதாந்த ஆரியென் என்றியம்ப நின்றோம்⋆
நாண் பெரியோம் அல்லோம் நாம் நன்றும் தீதும்⋆
268 நமக்குரைப்பார் உளர் என்று நாடுவோமே (37)

தேசிக பிரபந்தம் - பரமதபங்கம்

வையம் எலாம் இருள் நீக்கு மணி விளக்காய்⋆
மன்னிய நான்மறை மௌலி மதியே கொண்டு⋆
மெய் அலது விளம்பாத வியாசன் காட்டும்⋆
விலக்கில்லா நல் வழியே விரைந்து செல்வீர்⋆
ஐயம் அற அறு சமயக் குறும்பறுத்தோம்⋆
அணி அரங்கர் அடியவர்க்கே அடிமை செய்தோம்⋆
மைய கடல் வட்டத்துள் மற்றும் தோற்றும்⋆
269 வாதியர் தம் வாய்ப் பகட்டை மாற்றினோமே (52)

‡திகிரி மழு உயர் குந்தம் தண்டங்குசம்⋆ பொறி
சிதறு சதமுக அங்கி வாள் வேல் அமர்ந்ததும்⋆
தெழி பணில சிலை கண்ணி சீரங்க செவ்விடி⋆
செழிய கதை முசலம் திசூலம் திகழ்ந்ததும்⋆
அகில உலகுகள் கண்டையாய் ஓர் அலங்கலில்⋆
அடைய அடைவில் இலங்க ஆசின்றி நின்றதும்⋆
அடியும் அருகணையும் அரவாம் என்ன நின்று⋆ அடி
அடையும் அடியரை அன்பினால் அஞ்சல் என்பதும்⋆
மகிழும் அமரர் கணங்கள் வானம் கவர்ந்திட⋆
மலியும் அசுரர் புணர்த்த மாயம் துரந்ததும்⋆
வளரும் அணி மணி மின்ன வான் அந்தி கொண்டிட⋆
மறை முறை முறை வணங்க மாறின்றி வென்றதும்⋆
சிகி இரவி மதியம் உமிழ் தேசுந்த எண் திசைத்⋆

திணி மருள் செக உகந்து சேமங்கள் செய்ததும்⋆
திகழ் அரவணை அரங்கர் தேசென்ன மன்னிய⋆
270 திரி சுதரிசனர் செய்ய ஈர் எண் புயங்களே (54)

### தேசிக பிரபந்தம் - பரமபதசோபானம்

‡அடற் புள் அரசினும்⋆ அந்தணர் மாட்டினும்⋆ இன்னமுதக்
கடற் பள்ளி தன்னினும்⋆ காவிரி உள்ளம் உகந்த பிரான்⋆
இடைப் பிள்ளை ஆகி⋆ உரைத்ததுரைக்கும் எதிவரனார்⋆
271 மடைப் பள்ளி வந்த மணம்⋆ எங்கள் வார்த்தையுள் மன்னியதே (1)

### தேசிக பிரபந்தம் - ப்ரபந்தசாரம்

மன்னு மதிள் திருமண்டங்குடி தான் வாழ⋆
மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து⋆
துன்னு புகழ்த் தொண்டரடிப்பொடியே!⋆ நீ முன்
துழாய் மாலை பணி அடிமை செய்து நாளும்⋆
தென்னரங்க மணவாளற்கன்பு மிக்குச்
செப்பிய⋆ நல் திருமாலை நாற்பத்தைந்தும்⋆
பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்⋆
272 பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே (11)

உலகறிய மலி புகழ்க் கார்த்திகை மாதத்தில்⋆
உரோகிணி நாள் உறந்தை வளம் பதியில் தோன்றித்⋆
தலம் அளந்த தென் அரங்கர் பால்⋆ உலோக
சாரங்க மாமுனி தோள் தனிலே வந்து⋆
பல மறையின் பொருளால் பாண் பெருமாளே!⋆ நீ
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த⋆
சொலவமலனாதிபிரான் பத்துப் பாட்டும்⋆
273 சோராமல் எனக்கருள் செய் துலங்க நீயே (12)

‡தேசம் எலாம் உகந்திடவே பெரும்பூதூரில்⋆
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றி⋆

www.prapatti.com

காசினிமேல் வாதியரை வென்று⋆ அரங்கர்
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா!⋆ முன்
பூசுரர் கோன் திருவரங்கத்தமுதனார்⋆ உன்
பொன் அடிமேல் அந்தாதியாகப் போற்றிப்
பேசிய⋆ நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்⋆
274 பிழை அறவே எனக்கருள் செய் பேணி நீயே (14)

॥ திருவரங்கன் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com